Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

உங்கள் மண்ணில் எங்கள் சேவை



SPICE TRAVELS & TOURS (PVT) LTD

IATA

412, First Floor, Hospital Road, Jaffna. (Adjoining Sangeetha Mobile Links)

Fly Line Keethan - 0773 916 416 Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 தை 30 ஞாயிற்றுக்கிழமை (13.02.2011) பக்கங்கள் 12 ஓசை – 136

# இலங்கையில் மனித உரிமைகள் மேம்பாடு; புதிய முயற்சியில் இறங்கும் இராஜதந்திரிகள்



## ஜெனிவா மாநாட்டில் மார்பு தட்டுமா அரசு?

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமைகளைப் பேணிப்பாதுகாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக உலகிற்கு வெளிக்காட்டும் தீவிர முயற்சியில் அரசு தற்போது ஈடுபட்டு வருகிறது. இம் முயற்சியின் முதற்கட்டமாக ஜெனிவாவில் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் அமர்வில் கலந்து கொள்ளும் இலங்கை அரசாங்கத்தின் தூதுக்குழு ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் (11ஆம் பக்கம் பார்க்க)



## இரசாயன வெடிகுண்டுடன் இளம் பெண் ஒருவர் கைது

(கொழும்பு)

வெடிகுண்டு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருட்களுடன் பெண் ஒருவர் அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டு உள்ளார்.

இவர் கொழும்பு நோக்கி புறப்பட்டு வந்து கொண்டிருந்த பஸ் ஒன்றில் துப்பாக்கித் தூள் 170 கிராம், அமோனியா ஒரு கிலோ கிராம் ஆகியவற்றுடன் (11ஆம் பக்கம் பார்க்க)

# ஜெனிவாவில் மனித உரிமைகள் அமர்வு; சுதாகரித்துக்கொள்ளும் இலங்கை அரசு

## ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் முன்மொழிவு

(கொழும்பு)

**இலங்கையின் மனிதவுரிமை ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களின் பெயர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று முன்மொழியப்பட்டுள்ளது. இலங்கையின் 18ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் அமையப் பெற்ற நாடாளுமன்ற சபை நேற்று முதல் தடவையாகக் கூடிய போதே மனிதவு ரிமை ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப் பட்டுள்ளன.**

இதற்கமைய நீதியரசர் பிரியந்த பெரேரா தலைமையிலான இந்த மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கு தென் கிழக்கு பல்கலைக்கழகத்தில் முன்னாள் வேந்தர் கலாநிதி ஜெசீமா இஸ்மாயில், இலங்கையின் முன்னாள் பொலிஸ்மா அதிபர் ரி.ஆனந்த ராஜா, இலங்கையின் முன்னாள் அரச பகுப்பாய்வாளர் கலாநிதி ஆனந்த மெண்டிஸ் மற்றும் பேர்னாட் சொய்ஸா ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

(11ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு செய்மதி உபகரணங்கள் கடத்தல்

### யாழ்.வாசி கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து செய்மதி உபகரணங்களை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வந்த தமிழ் இளைஞர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

நாற்பது செய்மதி உபகரணங்களை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு விமானத்தில் கொண்டு வந்த யாழ்ப்பாணத் தமிழர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலைய த்தில் வைத்துச் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு உள்ளார்.

இவர் சுங்கத் திணைக்கள அதிகாரிகளுக்குத் தெரியாமல் (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைச் சிறார்களுக்கு ஊட்டச்சத்துக் குறைபாடு

### யுனிசெவ் ஆய்வின் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் வட-கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் இருக்கும் ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறார்களிடம் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு இருப்பதாக யுனிசெவ் உலக உணவுத் திட்டம் மற்றும், அந்நாட்டின் சுகாதார சேவைகள் அமைச்சகம் ஆகியவை நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்தத் தகவல்களை இலங்கை அரச ஊடகம் பிரசுரித்துள்ளது. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 53 சதவீதமான சிறார்களும், திருகோணமலையில் 45 சதவீதமும், அம்பாறையில் 44 சதவீதமான சிறார்களும் ஊட்டச்சத்து குறைபாடுடன் காணப்படுகிறார்கள் என்று அந்த ஆய்வு (11ஆம் பக்கம் பார்க்க)

## சட்டத்தின் பாதுகாப்பு இலங்கையருக்கு இல்லை

(கொழும்பு)

இலங்கையில் சிறுபான்மை இனங்களுக்கும் பெரும்பான்மை இனத்துக்கும் சட்டத்தின் பாதுகாப்புக்கள் கிடைப்பதில்லை என்றும், குற்றம் எதுவும் இழைக்காத நிலையில் புனையப்பட்ட குற்றச் சாட்டுக்களின் பேரில் ஆயிரக்கணக்கானவர்கள் இலங்கையில் சிறைத்தண்டனை அனுபவித்த வருகின்றனர் என்று ஆசிய மனித உரிமை ஆணைக்குழுவின் நிறை வேற்றுப் பணிப்பாளார் தெரிவித்துள்ளார்.இலங்கையில் எழுதப்பட்டுள்ள (11ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கிற்கான அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு பாரபட்சமின்றி பகிரப்படல் வேண்டும்

### அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் அரச அதிபர் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

கடந்தகால யுத்தத்தினைக் காரணம் காட்டி அபிவிருத்திப் பணிகளுக்கு ஒதுக்கப்படும் நிதிகளை அனைத்து மாவட்டங்களுக்கும் ஏற்றத் தாழ்வு இன்றி பகிரப்படல் வேண்டும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கோரியுள்ளேன். இவ்வாறு ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்தத்தினைக் காரணம் காட்டி முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா போன்ற (11ஆம் பக்கம் பார்க்க)

# நெடுந்தீவு–குறிகாட்டுவான் கப்பல் சேவையை அமைச்சர் டக்ளஸ் நாளை ஆரம்பிக்கிறார்



(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவான்-நெடுந்தீவு பயணிகள் போக்குவரத்தினைக் கருத்தில் கொண்டு 800 லட்சத்தில் நிர்மாணிக்கப்பட்ட பயணிகள் போக்குவரத்துப் படகின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. நாளை திங்கட்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் நெடுந்தீவு மக்களின் போக்குவரத்திற்கென அக்கப்பல் மக்களுக்காக சம்பிரதாயபூர்வமாக ஒப்படைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிகாட்டுவான்-நெடுந்தீவு பயணிகளின் நன்மை கருதி புதிய கப்பலொன்றின் அவசியத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்ததன் பயனாக மேற்படி கப்பல் கட்டுவிப்பதற்கான அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதன் பயனாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் இக்கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் டொக்டயார்ட் நிறுவனத்தின் மூலம் 800 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேற்படி கப்பல் நெடுந்தீவு மக்களின் நீண்டநாள் கனவுகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நிறைவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொது மக்களின் குடியிருப்புக்கள் பொன்னநகர் மக்களிடம் ஒப்படைப்பு

## எம்.சந்திரகுமார் எம்.பி. ஏற்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பொன்னநகரில் அமைந்துள்ள வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு எதிர் வரும் 22 ஆம் திகதி நடைபெற வுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் எடுத்த முயற்சியின் விளைவாக இந்த வீடுகளை மீண்டும் மக்களிடம் கையளிப்பதற்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி அனுமதி அளித்துள் ளார்.

கிளிநொச்சி பொன்னகர்ப் பகுதியில் இந்த மக்கள் மீளக் குடியேறியிருந்த போதும் இந்த வீடுகளில் மீளக்குடியேற முடி யாத நிலை தொடர்ந்து வந்தது. இதனையடுத்து இந்த வீடு களை மீண்டும் மக்களிடம் கையளிக்க வேண்டும் என பல் வேறு தரப்புகளிடம் பேச்சுக் களை நடத்தி இறுதியில் தமக் குச் சாதகமான பதில் கிடைத் துள்ளதாகவும், இதன்படி எதிர் வரும் 22ஆம் திகதிக்கு இந்த வீடுகளில் மக்கள் குடியமர்த்தப் படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இதற்கான அனுமதியை அளித்து ஏற்பாடுகள் வடமாகாண ஆளு நர் செய்துள்ளதாகவும் நாடா ளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.



## அறுவடை பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட மழைவெள்ளப் பாதிப்புக்களினால் 90 வீதமான நெற்செய்கை அறுவடை செய்ய முடியாத நிலையில் இருப்பதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக் கின்றனர்.

நெல் விளைந்த வயல் நிலங்களில் வெள்ளநீர் தேங்கிக் காணப் படுவதால் அறுவடை செய்ய முடியாது அவை நீரில் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் பல வயல் நிலங்களில் விளைந்த நெற்கதிர்களில் இருந்து முளை விடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மேட்டு நிலங்களில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை தற்போது அறுவடை செய்யப்பட்டு வருவதாக விவசாயிகள் தெரி விக்கின்றனர். (100)

## நம்பிக்கையாளர் சபை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புதிய சோனகத் தெருவில் அமைந்துள்ள மஸ் ஜிதுல் அபூபக்கர் பள்ளிவாச லின் புதிய நம்பிக்கையாளர்கள் தெரிவு நடைபெற்றன.

புதிய நம்பிக்கையாளர் சபைக் குப் பின்வருவோர் தெரிவு செய் யப்பட்டுள்ளனர்.

தலைவர்-ஏ.சி.ஹஸ்ஸான், செயலாளர்-எம்.எச்..எம்.பைசால், பொருளாளர் -எஸ்.எம்.எம்.சுலை மான், உபதலைவர்-எம்.எம். நலாம், உபசெயலாளர் எம்.ஆர்.எம்.றமீஸ் மற்றும் செயற்குழு உறுப்பினர்க ளாக எம்.எல். எஸ். அலாவுதீன், எம்.எச். நெய்னா முகமட், ஏ.ஆர். பஷீர், ஏ.எஸ். பாஜிஸ், ஆர்.ஷிராஜ முகமட் ஆகியோர் தெரிவு செய் யப்பட்டுள்ளனர்.

## நிவாரணம் கிடைப்பது எப்போது? வன்னி மக்களின் எதிர்பார்ப்பு

(கிளிநொச்சி)

வன்னியில் பெருமளவான பகுதி களில் நிவாரணம் வழங்கப்படா மையால் மக்கள் மிகவும் கஷ்டமான நிலையை எதிர்நோக்குகின்றனர். அத்துடன் இடம் பெயர்ந்த மக்கள் தற்போது பெய்துவரும் மழை யி னால் தொழில் வாய்ப்பின்றி அத் துடன் தொழிலுக்குச் செல்ல முடி யாத நிலையில் மிகவும் கஷ்ட மான சூழலில் வாழ்ந்து வரும் நிலையில் அவர்களது நிவாரணம் வழங்கப்படாமையால் கவலை யுடன் தெரியப்படுத்தி இதற்கான வழிமுறைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற் கொண்டு தமக்கு உதவுமாறு கேட் டுக் கொள்கின்றனர். (77)

## மெய்வல்லுநர் போட்டி

வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிா வரும் செவ்வாய்க்கிழமை பி.ப.2 மணிக்கு நடைபெறவுள ளது.

பாடசாலை அதிபர் ந.சிவசுப்பிர மணியம் தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வில் வலி.மேற் குப் பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திரசிகாமணி பிரதம விருந்தி னராகக் கலந்து கொள்வார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யின் வலி.மேற்கு அமைப்பாளர் வே.மகேந்திரன், உலகதரிசனம்-இலங்கை நிறுவனத்தின் திட்ட அலுவலர் ஜெ.சரோன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (54)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தர வாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (R/017)


## யாழ்-கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் சம்மேளனம் உதயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.முஸ்லிம் மக்களின் தேவைகளை நிறைவேற்றி வரும் அரசசார்பற்ற நிறுவனங் களும் (13) ஜும்மாப்பள்ளி வாசல் நிர்வாகிகளும் ஒன்றி ணைந்து யாழ்-கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தை உரு வாக்கியுள்ளனர்.

இதன் தலைவராக எம்.யூ. எம்.தாஹிர், செயலாளராக அஷ்ஷேக் அஸ்மின் ஜயூப், இணைப்பாளராக எம்.ஏ.சி. முபீன் ஆகியோருடன் 63 உறுப் பினர்கள் செயற்படுகின்றனர்.

இவ்வமைப்பின் முக்கிய நோக்கம் மீள்குடியேறியுள்ள மக்களின் தேவைகளை நிறை வேற்றுவதுடன் மீள்குடியேற வுள்ள மக்களுக்குத் தேவை யான அடிப்படை வசதிகளை அமைத்துக்கொடுப்பதாகும்.

கடந்த வாரம் சேதமான வீடுகளை அளந்து வீட்டு நஷ் டத்துக்கான மதிப்பீடு செய்யப் பட்டன. இதில் 1500 வீடுகளை மதிப்பீடு செய்துள்ளார்கள். இதற்காக கொழும்பிலிருந்து இஸ்லாமிய மாணவர் இயக் கமான ஜம்மியா உறுப்பினர்கள் 63 பேர் வருகை தந்து இப்ப ணியை மேற்கொண்டனர். தொடர்ந்து முஸ்லிம் மக்களின் பிரச்சினை சம்பந்தமாக அரச உயர் அதிகாரிகளையும் சந்தித்து உரையாடியுள்ளார்கள்.

## ஆராதனை விழா

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் சற்குரு ஸ்ரீ தியாக ராசா சுவாமிகளின் 164 ஆவது ஆராதனை விழா எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இவ் ஆராதனையில் கலந்து கொள்ளும் இளங்கலைஞர்கள், முதுக்கலைஞர்கள் தமது பெயரை மேறபடி மன்ற காரியாலயத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு மன்றச் செயலாளர் அறிவித் துள்ளார்.

## வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டன

(பளை)

பளையில் மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியன தமது புதிய கிளைகளைத் திறந்துள்ளன.

கடந்த ஆறாம் திகதி இந்தக் கிளைகள் திறந்து வைக்கப் பட்டன.

இதன் மூலம் பச்சிலைபள்ளி மற்றும் வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்களின் வங்கி நட வடிக்கைகள் இலகுபடுத்தப் படும் எனத் தெரிவிக்கப்படுகி றது. (29)

## செய்முறைப் பரீட்சைக்கு அனுமதி அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

2010 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும் போன்ற பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், இவ் அனுமதி அட்டைகளினை பரீட்சைக்குத் தோற்றும் மாண வர்கள் கல்லூரி அதிபருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள் ளலாம் என கிளி.இந்துக் கல்லூரி அதிபர் சி.பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 20.02.2011 அன்று நடைபெறவுள்ளது.

இதேவேளை, 2011 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு இரண்டாவது தடவையாகத் தோற்றும் மாணவர்கள் 15.02.2011 இற்கு முன் தமது பதிவுளை மேற்கொள்ளுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (69)

## விஞ்ஞான அறிவுப் போட்டி

(ஒட்டுசுட்டான்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞான மன்றத்தால் பாட சாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்படும் விஞ்ஞான வினா விடைப் போட்டி எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு விண்ணப்பித்த ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் 5 மாணவர்கள் வீதம் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

போட்டிக்குத் தோற்றும் கிளிநொச்சி, துணுக்காய் வலயப் பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் கிளிநொச்சி திரேசா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர். (42)


நல்லூர்
சரவணா ரெக்ஸ்
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய சாறிகள்

மாபெரும் மலிவு விற்பனை
♦பட்டுச்சாறிகள் ♦சில்க்ஸ் சாறிகள் ♦பஞ்சாபிகள் ♦கொட்டன் சாறிகள் ♦பஞ்சாபித் துணிகள்
ஏராளம்! ஏராளம்
அலை அலையாக வாரீர் !!
அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!!
எங்குமே காணாத அதி சிறப்புத் தள்ளுபடி
காலம்:- 16.02.2011 முதல் 20.02.2011 வரை
இடம்:-நல்லூர் பூங்கனிச்சோலைக்கு முன்பாக (முடமாவடி)
நேரம்:- காலை 9.30 மணிமுதல் இரவு-8.30 மணிவரை.
(C/442)
வாடிக்கையாளர் நலன்கருதி பிரத்தியேகமான இடம்
ஐந்து நாட்கள் மட்டுமே

நம்வாழ்க்கையில் இருந்து நல்ல நண்பர்களை பிரித்து விடுவது சூரியனை உலகத்தில் இருந்து மறைத்துவிடுவது போல் ஆகும். கடவுளின் சிறந்த நன்கொடையே நல்ல நண்பன்.

- சிசிரோ -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

## மீண்டும் பதிவு நடவடிக்கை

யுத்தம் முடிவுக்கு வந்து சமாதானக் கதவுகள் திறக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்த நிலையில், மீண்டும் குடும்பப் பதிவு நடவடிக்கைகளைப் பாதுகாப்புத்தரப்பினர் ஆரம்பித்துள்ளனர்.

குடாநாட்டில் அண்மைக் காலங்களில் இடம் பெற்றுவந்த கொலை, கொள்ளைச் சம்பவங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்குடனேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

படைதரப்பினரின் இப்பதிவு நடவடிக்கை குடாநாட்டு மக்களுக்கு என்றும் புதுமையான விடயமல்ல.

ஏ-9 பாதை மக்கள் போக்குவரத்துக்குத் தடைவிதிக்கப்பட்ட நிலையில் 2007ஆம் ஆண்டு படைத்தரப்பினரால் குடும்ப உறுப்பினர்களின் புகைப்படம் ஒட்டிய குடும்ப விபர அட்டைகள் வழங்கப்பட்டிருந்தன.

இவ்வட்டைகளைச் செல்லுபடியற்றவை ஆக்கி புதிய அட்டைகள் வழங்கும் ஒரு நடவடிக்கையாகவே இப்பதிவுகளை அவர்கள் மேற்கொண்டு வருவதாக அரச அதிபரும் தெரிவித்துள்ளார்.

இப்பதிவு நடவடிக்கைகள் தொடர்பான பூரண விளக்கங்கள் சகல கிராம அலுவலர்களுக்கும் படைத்தரப்பினர் வழங்கியுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

வன்செயல்தாரிகளின் கோரப்பிடியிருந்து மக்களைப் பாதுகாக்கும் ஒரு நடவடிக்கையாக இது இருக்குமானால், எவரும் இதற்கு அஞ்சத் தேவையில்லை.

ஆனால் இது ஒரு பொறியாக இருக்குமோ என மக்கள் அச்சம் கொள்வது வாஸ்தவம்தான்.

வன்னியில் இருந்து மீண்டும் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பியுள்ளவர்கள் மீதும் இப்பதிவுகளை மேற்கொள்ளப்படவிருப்பது ஏதோ ஒரு வகையில் சகலரது கவனத்தையும் ஈர்த்துள்ள நடவடிக்கையாக உள்ளது.

இதன் மூலம் மக்கள் பல சிரமங்களையும், அசௌகரியங்களையும் அனுபவிக்க வேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளியிருப்பதைக் கருத வேண்டியுள்ளது.

குடும்ப விபரங்களைப் பதியும் நடவடிக்கைகளில். கிராம அலுவலர்களே பெரும்பாலும் ஈடுபடுத்தப்படவுள்ளதாகப் படைத்தரப்பினர் அறிவித்துள்ளனர்.

கிராம அலுவலர்களால் மேற்கொள்ளப்படவுள்ள இப்பதிவு நடவடிக்கைகள் மக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்குப் பங்கம் ஏற்படாத வகையில் சம்பந்தப்பட்டவர்கள் நடந்துகொள்ள வேண்டும்.

படையினரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்படவுள்ள இப்பதிவு நடவடிக்கைகளானது - அண்மைக் காலங்களில் குடாநாட்டு மக்களின் இரத்தங்களை உறைய வைத்து அச்சத்தில் ஆழ்த்திய கொலை, கொள்ளைச் சம்பவங்களின் சூத்திரதாரிகளை இனங்காண வழிவகுக்குமா? என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்த 24 மணிநேரக் கூட்டு ரோந்து நடவடிக்கையை அடுத்து கொலை, கொள்ளைச் சம்பவங்கள் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறவுள்ள இத்தருணத்தில் பாதுகாப்புப் படையினர் குடாநாடு தழுவிய பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டிய கடமையும் அவர்களுக்கு உண்டு என்பதையும் நாம் மறந்துவிடலாகாது.

-ஆசிரியர்-

# பல்வேறு தொழில் வெற்றிடங்களை உயர் கல்வி அமைச்சு நிரப்ப நடவடிக்கை

## அமைச்சர் திஸநாயக்க தகவல்

(கொழும்பு)

இலங்கையில் விமான ஓட்டிகள், கணினி இயக்குனர்கள், ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் தாதிமார் ஆகியோருக்கு பெரும் வெற்றிடம் நிலவி வருவதாகவும்,ணவே இந்த வெற்றிடத்தை நிவர்த்தி செய்வதற்கு உயர்கல்வி அமைச்சு மூலம் நடவடிக்கை விரைவில் எடுக்கப் படுமென அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் புலமைப்பரிசில் விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசினால் நிர்வகிக்கப்படும் பல்கலைக்கழகங்களில் கல்விபயிலும் மாணவர்கள், தனியாா பல்கலைக்கழகங்கள் இங்கு அமைக்கப்படுமானால் அது அச்சுறுத்தலாக அமைந்துவிடுமெனத் தெரிவிக்கின்றனர். ஆனால் இலங்கையில் தற்போது 31 தனியார் பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன. அவற்றில் சுமார் 22 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். ஆனால் இந்த மாணவர்கள் எவ்வித அடிப்படை வசதிகளையும் பெற்றிருக்கவில்லை.

எனவே உயர்கல்வி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் புதிய தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு உத்தேசித்துள்ளோம். தனியார் பல்கலைக்கழகங்கள் தற் போது நிறுவ வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் வருடாந்தம், எட்டு பில்லியன் ரூபாவை பல்கலைக்கழகங்களுக்கான புதிய கட்டடங்களை அமைக்க செலவிட்டுவருகின்றது. ஆனால் அமைககப்படும் கட்டடங்கள் கூட நல்ல நிலையில் இல்லை.

தனியார் பல்கலைக்கழகங்களின் தரங்கள் குறித்து உயர்கல்வி அமைச்சு குழுவொன்று நியமிக்கவுள்ளது.

பல்கலைக்கழகங்களில் ஏற்படும் குழப்பங்களுக்கு ஜே.வி.பியே காரணமாக உள்ளது. எனவே குழப்பங்களை ஏற்படுத்துவோருக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் பல்கலைக்கழகங்களில் அரசியல் நடவடிக்கைகளுக்கு இனியும் அனுமதி அளிக்கப்படமாட்டாதென அவர் மேலும் தெரிவித்தார்.

# கூலிக்கு கொலைசெய்யும் கும்பல் கொழும்பில் பொலிஸாரால் கைது

## சிறையிலிருந்து கட்டளையிட்ட தலைவன்

(கொழும்பு)

கூலிக்குக் கொலைசெய்யும் கும்பலொன்றின் உறுப்பினர்கள் கொழும்பை அண்மித்த பிரதேசமொன்றில் இருந்து பேலியாகொடை விசேட புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குழுவின் தலைவன் சிறையில் இருக்கும் அதே வேளை, அங்கிருந்தபடியே அவன் தன் கும்பலைத் தொடர்ந்தும் இயக்கி வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். குழுவின் தலைவனும் கொலைக்குற்றச்சாட்டுகளின் பேரிலேயே சிறையில் அடைக்கப்பட்டுள்ளான்.

அத்துடன் கொலைக்கும்பலுடன் தொடர்பு வைத்திருந்த ஊர்காவற்படை வீரர் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதற்கு மேலதிகமாக கொலைக் கும்பலின் தலைவனின் மனைவியும் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டுள்ளார்.

மைக்ரோ வகைத் துப்பாக்கி ஒன்றைத் தன்வசம் வைத்திருந்த அந்தப் பெண், கொலைகளை மேற்கொள்ளச் செல்லும்போது மட்டும் குழு உறுப்பினர்களுக்கு அதனை வழங்குவதாகப் பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

யாரையேனும் கொலை செய்யச் செல்லும் போது துப்பாக்கியை எடுத்துச் செல்வதும், அதன் பின் அதனைத் திரும்ப எடுத்து வந்து கும்பலின் தலைவனுடைய மனைவியிடம் ஒப்படைப்பதும் ஊர்காவல் படை வீரரின் பணியாக இருந்துள்ளது.

அதற்காக அவருக்கு ஒவ்வொரு தடவையும் கணிசமான தொகை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது அவர்கள் மேற்கொண்டுள்ள படுகொலைகள் மற்றும் இதர குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் பொலிசாரால் முன்னெடுக்கப்படுகின்றன.

# தளபாடவசதிகளை ஏற்படுத்தி தருமாறு வன்னி பாடசாலை சமூகம் கோரிக்கை

(முல்லைத்தீவு)

கிளிநொச்சி, துணுக்காய், முல்லத்தீவு, மடு ஆகிய கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தளபாடப் பற்றாக்குறை காணப்படுவதாக பாடசாலைச் சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

வன்னியில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின்போது சேதமடைந்த இப்பாடசாலைகள் மீளவும் புனரமைக்கப்பட்டு தற்போது சிறப்பான முறையில் மாணவர்களுடைய கற்றல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் போதியளவு தளபாடங்கள் இல்லாமையால் மாணவர்கள் நிலத்தில் இருந்தே கல்வி கற்க வேண்டியநிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாளுக்குநாள் அதிகரித்து வருகின்ற மாணவர்களின் வரவு நிலையில் அவர்கள் தளபாட வசதிகள் இன்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக குறித்த கல்வி வலயப் பாடசாலை அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பாடசாலைகளில் ஒரு சிலவற்றைத் தவிர ஏனைய பாடசாலைகளின் கட்டடங்கள் சேதமடைந்திருப்பதாகவும் இதுவரை அவை மீளவும் புனரமைக்கப்படவில்லை எனவும் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இதனால் மாணவர்கள் மரநிழல்களின் கீழும் கூரை விரிப்புக்களின் கீழும் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த நிலையில் தற்போது ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் . மாணவர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக மீள இயங்க ஆரம்பித்து ஒருவருடகாலமாகியும் பாடசாலைகளுக்குரிய வசதிகள் முழுமையாக ஏற்படுத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே வன்னி மாணவர்களின் கல்வி நடவடிக்கையை மேம்படுத்தும் முகமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ, அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களோ இப்பாடசாலைகளில் நிலவும் தளபாடப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டுமென பாடசாலைச் சமூகத்தினர் மற்றும் பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (42)

# போக்குவரத்து வழமைக்கு

(மன்னார்)

மன்னார் மதவாச்சி பிரதான வீதியூடான போக்குவரத்துக்கள் கடந்த வியாழக்கிழமை முதல் வழமைக்குத் திரும்பியுள்ளன.

இதனால் மன்னாரிலிருந்து வவுனியா மற்றும் மதவாச்சியூடாக வழமைபோன்று அரச, தனியார் போக்குவரத்து வாகனங்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

வெள்ளப் பெருக்குக் காரணமாக மன்னாா மாவட்டத்திற்கான போக்குவரத்துச் சேவைகள் தடைப்பட்டிருந்தன.

இதனால் அத்தியாவசியப் பொருட்கள் விலை அதிகரித்து காணபபட்டதுடன், பொருட்களுக்குத் தட்டுப்பாடும் நிலவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு
# அரச ஊழியர்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை

(முல்லைத்தீவு)

யாழ். மாவட்டத்திலிருந்து வன்னப் பகுதிக்கு இடமாற்றம் பெறறுச் சென்ற ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்கள் தங்குமிடவசதி போக்குவரத்து செய்வதற்கான போதியளவு பேருந்து வசதிகள் என்பன இல்லாமையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாகத் தங்குமிடவசதிகள் இன்றி ஆசிரியர்கள் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் இவற்றில் முல்லைத்தீவு, துணுக்காய், மடு ஆகிய கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களே இவ்வாறு சிரமப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தற்போது ஏற்பட்ட கால நிலை மாற்றத்தினால் கடும்குளிரிலும், மழை தூவாணத்தின் மத்தியிலும் பாடசாலை வகுப்பறைகளில் தங்கி நின்றே கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொண்டு வருவதாக ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட நட்டாங்கண்டல் அ.த.க. பாடசாலை, கற்சிலமடு மற்றும் தண்டுவான் அ.த.க பாடசாலைகள், பாலிநகர் மகாவித்தியாலயம், முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க பாடசாலை ஆகியவற்றில் இவ்வாறான அவலநிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, போக்குவ ரத்து வசதிகள் சீரில்லாமையால அரச ஊழியர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் குறிப்பாக முல்லைத் தீவு, துணுக்காய், முத்தையன் கட்டு, ஒட்டுசுட்டான் பாதையூடாக ஒருசில பேருந்துகளே சேவையில் ஈடுபட்டு வருகின்றன. எனினும் அவை சில நாட்களில் சேவையில் ஈடுபடுத்தப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தாம் கூடுதல் பணம் கொடுத்து வாகனங்களில் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் கிளிநொச்சி யாழ். போக்குவரத்துச் சபையினர் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் போதியளவு பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துமாறும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (42)

# 16 வருடங்களின் பின்னர் நடைபெறுகின்ற
# கல்லடி புனித யூதாததேயு ஆலயத் திருவிழா

(யாழ்ப்பாணம் )

கத்தோலிக்க மக்களின் யாத்திரைத் தலங்களில் ஒன்றான கல்லடி புனித யூதாத தேயு ஆலயத் திருவிழா 16 வருடங்களின் பின் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை பாஷையூர் பங்குத்தந்தை தலைமையில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

1995 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளின் போது இவ்வாலயத்தின் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தடைப்பட்டிருந்த அனுமதியை தற்போது இராணுவத்தினர் வழங்கியுள்ளனர்.

பாஷையூர் பங்கு மக்களினால் நிர்வகிக்கப்பட்டு வரும் இந்த ஆலயத்தினை கடற்றொழிலாளர்கள் வழிபட்டு வருவதுடன் தங்கி நின்று தொழில் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இவ்வாலயத்தில் தங்கி வழிபாடுகளை மேற்கொள்வதற்கு 50 குடும்பங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய மக்களும் இவ்வாலயத்திற்குச் சென்று வருவதற்கான அனுமதியை இராணுவத்தினர் வழங்கியுள்ளனர்.

எனினும் வழிபாடுகளுக்காகச் செல்லும் மக்கள் அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு கரைக்குச் செல்ல வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஜசிக்கா நிறுவனத்தின் உதவியுடன்
# அமைக்கப்படும் மீன் ஏலவிற்பனை நிலையம்

(நல்லூர்)

யாழ்.மாவட்டத்தில் ஐந்து மீன் ஏல விற்பனை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜசிக்கா நிறுவனத்தின் நிதி உதவியுடன் கடற்தொழிலாளர்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் இம் மீன் ஏலவிற்பனை நிலையங்கள் அமைக்கப்பட இருப்பதாகக் கடற்றொழில் நிறுவனத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

புங்குடுதீவு, கச்சாய், கற்கோவளம், மண்டைதீவு, மறுவன்புலோ போன்ற இடங்களில் இந்த மீன் ஏல விற்பனை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. (25)

# வறிய நிலைக் குடும்பங்களுக்கு
# இராணுவத்தால் வீடுகள் அமைப்பு



(வடமராட்சி)

வடமராட்சி மற்றும் தென்மராட்சிப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் வீடற்ற நிலையில் பல அசௌகரியங்களுக்கு மத்தியில் வாழும் மக்களுக்கு, வரணிப் பிரதேசத்தைச் சேர்ந்த 52ஆவது படைப் பிரிவினரால் வீடுகள் அமைத்துக் கொடுக்கும் பணிகள் கடந்த வாரம் ஆரம்ப மாகியது.

யாழ்ப்பாணத்தில் வீடற்ற நிலையில் உள்ளவர்களுக்கு, 50 வீடுகளை நிர்மாணிக்கத் தேவையான கட்டிடப்பொருட்களை வழங்க ஹபிடாட் அமைபபின் பணிப்பாளர் டெஹானி செனவிரத்ன சம்மதித்துள்ளார்.

கடந்த ஜனவரி 30 ஆம் திகதி சுப நேரத்தின்போது 52ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகளால் முதல் 10 வீடுகளுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. மேலும் இந்நற்பணியானது படை வீரர்களால் தொடரப்படவுள்ளது. முதற்கட்டமாக 152 வீடுகளை இப் பிரதேசத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு நிர்மாணித்துக் கொடுதத 52 ஆவது படைப்பிரிவினர், இந் நற்பணியை இரண்டாம் முறையாகவும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் அரசசார்பற்ற அமைப்பான ஹபிடாட், வடக்கு மற்றும் தெற்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 3000 வீடுகளை வெளிநாடுகளின் உதவிகளைக் கொண்டு நிர்மானித்துக் கொடுத்த அதேவேளை இராணுவத்தால் வடக்கில் பல பாரிய உதவி வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கைத்தொலைபேசி
# எடுத்துச்செல்லத் தடை

(நல்லூர்)

நல்லூர் கந்தன் ஆலயத்திற்குள் கைத்தொலைபேசிகள் பாவிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

தொலைபேசிகளுடன் ஆலயத்திற்கு உள்ளே வழிபடச் செல்வோர் அதன் சேவையை நிறுத்தி விட்டு (ஓவ்) செல்ல வேண்டும் எனவும் அறுவுறுத்தப்பட்டுள்ளதுடன், ஆலயத்திற்கு உள்ளே புகைப்படம் பிடிப்பதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தின் புனிதத்தை பேணுமாறு பக்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.(25)

# தீவிர ரோந்து நடவடிக்கைகளினால்
# கொள்ளைச் சம்பவங்கள் கட்டுப்பாடு

(கோப்பாய்)

வலி.கிழக்கு பிரதேசத்தில் இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டதை அடுத்து அங்கு குற்றச் செயல்கள் ஓரளவு கட்டுபாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டிருப்பதாகப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கொள்ளை, கொலை மற்றும் கசிப்பு உற்பத்தி போன்ற நடவடிக்கைகள் ஓரளவு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

இரவு வேளையில் இராணுவத்தினர் கால்நடையாகவும் மற்றும் சைக்கிள்களிலும் வீதி ரோந்து நடவடிக்கைகளை இப் பகுதியில் தீவிரப்படுத்தியுள்ளனர்.

பொது இடங்களில் இரவு நேரங்களில் கூடி நிற்போரையும் அங்கிருந்து வீடுகளுக்குச் செல்லுமாறும் அறிவுறுத்தி வருகின்றனர்.

இரவில் சந்தேகத்திற்கிடமாக நடமாடுவோரை இராணுவத்தினர் தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தியும் வருகின்றனர். (25)

# மண்டைதீவு வைத்தியசாலைக்கு மருந்தகம்
# அம்புலன்ஸ் வண்டி வழங்கவும் ஏற்பாடு

(மண்டைதீவு )

மண்டைதீவு கிராம மக்களின் வைத்திய சுகாதார தேவைகளை ஓரளவிற்காகவது பேணுவதற்கு வடபிராந்திய சுகாதாரப் பணிமனையினர் ஒரு சிறிய மருநதகமும் அவசர தேவைகளுக்குப் பயன்படக்கூடிய அம்புலன்ஸ வண்டி ஒன்றையும் வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக நம்பிக்கையான தகவல்கள் தெரிவிக்கின்றன.

மருந்தகம் அமைப்பதற்கான வசதியான காணி ஒன்றைப் பெறுவதற்கு மக்கள் இருக்கும் குடிமனைப் பகுதியில் திணைக்கள உத்தியோகத்தர்கள் முயற்சி செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் செறிவாக உள்ள இடங்களில் அரச நிலங்கள் இலலாததால் தனியாரிடம் நீண்ட காலத் குத்தகை அடிப்படையில அல்லது மனிதாபிமான அடிப்படையில் சிறிய துண்டுக் காணி ஒன்றை அந்தப் பகுதியில் உள்ள காணி உரிமையாளர்களிடம் இருந்து பெறுவதற்கும் முயற்சி செய்து வருகின்றனர்.

மண்டைதீவின் மேற்குக் கரையோரத்தில் உள்ள அயல் கிராமங்களான அல்லைப்பிட்டி, மண்கும்பானுக்குமான வைத்தியசாலை பிரசவ விடுதி, அதிகாரிகள், மருத்துவமாது மற்றும் சிற்றூழியர் தங்கும் விடுதிகள் இருந்த இடத்தில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் தங்கியுள்ளதால் தனியாரிடம் இருந்து குடிமனை நெருக்கமாக உள்ள பகுதிகளில் திணைக்களம் காணி பார்ப்பதாக அந்தக் கிராமத்தவர்கள் தெரிவித்துள்ளமை குறிபபிடத்தக்கதாகும். (23)

# பயிற்சிப் பட்டறை


(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறையின் முதலாம் அமர்வு 12, 13, 16 ஆகிய திகதிகளில் யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியலாயத்தில் நடைபெற்று வருகின்றது.

இப்பயிற்சிப் பட்டறையில் யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட சகல பாடசாலைகளில் இருந்தும் ஒரு ஆசிரியராவது பங்குபற்றுதல் அவசியமானதாகும்.

இதில் நேற்று நடைபெற்ற செயலமர்வில் கலந்துகொள்ளத் தவறியவர்கள் இன்று முதல் கலந்து கொள்ளலாம் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.





யாழ்.புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டிகள் வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசில் வழங்குவதையும் விளையாட்டு நிகழ்வையும் படங்களில் காணலாம். (பா)

# வடமராட்சி கிழக்கில் மீள்குடியமர்ந்த மக்கள் நிரந்தர வீடுகள் அமைத்துத்தருமாறு கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து நாலு மாதங்கள் முடிவடைந்த நிலையிலும் இவர்களுக்குரிய தற்காலிக வீடுகள் எதுவும் அமைத்துக் கொடுக்கப் படவில்லை.

இவர்களால் அமைக்கப்பட்ட சிறிய தற்காலிக குடிசைகளிலும், தறப்பாள் கொட்டில்களிலுமே வெகு சிரமத்தின் மத்தியில் வசித்து வருகின்றனர்.

சுமார் 600 குடும்பங்கள் வரை வசித்து வரும் உடுத்துறை கிராம அலுவலர் பிரிவில் ஜெய்கா நிறுவனம் 75 தற்காலிக வீடுகளையும், சோஆ (ZOA) நிறுவனம் 25 வீடுகளையும் 100 வரை யான கழிப்பறைகளையும் அமைத்து அண்மையில் 100 குடும்பங்களுக்குக் கையளிக்கப்பட்டிருந்தன.

இப்பிரதேசத்தில் மீளக்குடியமர்த்தப்பட்ட 6 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 13 கிராமங்களிலுள்ள சுமார் 2600 வரையான குடும்பங்கள் கடந்த மாதங்களில் பெய்த கடும் மழையின்போது பல்வேறு கஷ்டங்களை அனுபவித்திருந்தனர்.

நிரந்தர வீடுகள் அமைப்பதில் தாமதம் ஏற்படும் பட்சத்தில் கழிவறையுடன் கூடிய தற் காலிக வீடுகள் அமைத்துத் தரும்படி உரிய அதிகாரிகளிடம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (70)

# அவித்த உருளைக்கிழங்கிற்கு கூடுதல் கிராக்கி ஏற்பட்டுள்ளது

(ஆனைக்கோட்டை)

நவாலிப் பகுதியிலுள்ள தேநீர்க் கடைகளில் விற்பனை செய்யப்படும் அவித்த உருளைக்கிழங்குக்கு பெரும் மௌசு ஏற்பட்டுள்ளதாக கடை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பலகாரம் செய்வதற்குப் பயன்படும் உழுந்து, கடலைப் பருப்பு, தேங்காய் எண்ணெய் ஆகியவற்றின் விலையேற்றத்தினை அடுத்து தற்போது மலிவாக விற்கப்படும் உருளைக்கிழங்கை அவித்து அவற்றை விற்பனை செய்து வருவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தேநீர் அருந்தவரும் பொதுமக்கள் அவற்றை வாங்கி விருப்பத்துடன் சாப்பிடுவதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (104)

# வெள்ளநீர் தேங்கி நிற்பதால் முளைவிடும் நெற்கதிர்கள்

(வடமராட்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளப் பாதிப்புக்களினால் 90 வீதமான நெற்செய்கை அறுவடை செய்யமுடியாத நிலையில் இருப்பதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

நெல் விளைந்த வயல் நிலங்களில் வெள்ளநீர் தேங்கிக் காணப்படுவதால் அறுவடை செய்யமுடியாது அவை நீரில் அழிவடையும் நிலை ஏற்பட் டுள்ளதாகவும், இதனால் அதிக வயல் நிலங்களில் விளைந்த நெற்கதிர்களில் இருந்து முளை விடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மேட்டு நிலங்களில் மேற்கொள்ளப்பட்ட நெற் செய்கை தற்போது அறுவடை செய்யப்பட்டு வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர். (100)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனர்

(ஒட்டுசுட்டான்)

அண்மையில் பெய்த கடும் மழையினால் டெங்குக் காய்ச்சல் மீண்டும் ஆரம்பிக்கும் அபாயம் காணப்படுவதனால் ஒட்டுசுட்டான், கற்சிலை மடுப் பிரதேசங்களில் இதனைத் தடுப்பதற்கான முன் ஏற்பாட்டு நடவடிக்கைகளில் இப் பிரதேசங்களுக்குப் பொறுப்பான இராணுவத்தினர் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் இராணுவத்தினர் குறித்த பிரதேசங்களிலும் மற்றும் பாடசாலைகளிலும் காணப்படும் திண்மக் கழிவுகளினை அகற்றி வருவதுடன், தேங்கி நிற்கும் நீரினை ஆற்றுக்குச் சேர்க்கும் பணிகளிலும், இது தொடர்பாக மக்களுக்கான விழிப்பூட்டும் பணிகளிலும் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (42)

## கற்றல் உபகரணங்கள் மாணவர்களுக்கு கையளிப்பு

(புங்குடுதீவு)

மகளிர் அபிவிருத்தி நிலையம் வறுமைக்கோட்டின் கீழ் வசிக்கும் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக கல்வி உபகரணங்களை விநியோகித்துள்ளது.


கடந்த வாரத்தில் தீவுப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கு இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் இவை வழங்கப் பட்டு வருகின்றன. (25)

# யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனம் உயர் மட்ட அதிகாரிகளுடனான சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மீளக் குடியேறியுள்ள, குடியமர வுள்ள முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக யாழ். கிளிநொச்சி முஸ் லிம் சம்மேளன அங்கத்தவர்கள் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரை அவர்களின் வாசஸ்தலத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இக் கலந்துரையாடலின்போது யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மற்றும் யாழ். மாநகர சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (19)



## பருத்தித்துறை வீதியில் வாகனம் தடம்புரண்டது

(கோப்பாய்)

வேகக் கட்டுப்பாட்டை மீறி செலுத்தப்பட்ட ஹயஸ் வாகனம் ஒன்று வீதியை விட்டு தடம் புரண்டு விபத்திற்கு இலக்காகியது.

இந்த விபத்துச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை வீதியில் இடம் பெற்றுள்ளது.

சம்பந்தப்பட்ட வாகனத்தை செலுத்தி வந்த இரண்டு இளைஞர்களும் அதிக மதுபோதையில் காணப்பட்டதோடு, அவர்கள் காயம் இன்றி தப்பிக் கொண்டனர். மது அருந்திவிட்டு வாகனம் செலுத்திய சாரதி இராணுவத்திரரின் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப் பட்டார். (25)

## ஆதினியின் இன்றைய பலன்
## (13.02.2011 – ஞாயிற்றுக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி மாசி 01

இராகுகாலம் 5.04- 6.34, சுபநேரம் 9.34 -11.04, தசமி மு.இ.9.57, ரோகிணி மு.ப.847, சித்தம், விஞ்ஞானி கலிலியோ பிறந்த தினம்.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:- அயலவர் உதவி, நண்பர் சேர்க்கை, நற்செய்தி.

ரிஷபம்:- நண்பர் உதவி, தானதர்ம விருப்பு, பெரியோர் ஆசி.

மிதுனம் :- திருடர் பயம், மனக்குழப்பம், வீணான கற்பனை.

கடகம்:- இனசன பந்துக்கள் உதவி, குடும்பத்தில் மகிழ்ச்சி, பிரயாணம்.

சிம்மம்:- மேலதிகாரிகள் பாராட்டு, நண்பர் உதவி, காரிய ஜெயம்.

கன்னி :- பொறாமைப்படல், போட்டிகளில் தோல்வி, நிதானமிழப்பு.

துலாம் :- நினைத்தகாரியம் சித்தி, பாராட்டு, உறவினர் உதவி.

விருச்சிகம்:- மேலான செயலில் ஈடுபடல், பெரியோர் பாராட்டு, மதிப்பு உயர்வு.

தனுசு:- வரவுக்கு மிஞ்சிய செலவு, குடும்பக் கலகம், விதண்டாவாதம்.

மகரம்:- அமைதியான போக்கு, ஆலய தரிசனம், நண்பர்கள் சேர்க்கை.

கும்பம் :- வீண் வார்த்தைப் பிரயோகம், சினத்தல், அவமானம்.

மீனம்:- காரிய சித்தி, பெரியோர் ஆசி, மனமகிழ்ச்சி.

## பம்பாய் வெங்காயத்தின் விலை தற்போது வீழ்ச்சி கண்டுள்ளது

(நல்லூர்)

பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு போன்றவற்றை வர்த்தக நுகர்வோர் அமைச்சு அதிகளவில் இறக்குமதி செய்துள்ளது.

இவை அதிகளவில் இறக்குமதி செய்யப் பட்டுள்ளதால் அவற்றின் விலைகள் பெருமளவு வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றன. குறிப்பாக இந்தப் பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு குடாநாட்டு சந்தைகளில் அதிகளவில் விற்பனைக்கு வந்து சேர்ந்துள்ளது. உருளைக்கிழங்கு கிலோ 50 ரூபாவாகவும் பெரிய பம்பாய் வெங்காயம் கிலோ 60 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.(25)

# வியாபாரிகள் அவஸ்தை

(ஆனைக்கோட்டை)

நவாலியிலுள்ள பிரசாத் சந்தையில் மலசலகூட வசதிகள் இல்லாததால் வியாபாரிகளும் நுகர்வோரும் பெரும் அசௌ கரியங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட நேரம் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இச்சந்தையில் மலசலகூடங்கள் அமைக்கப்படாததால் வியாபாரிகள் பெரும் அவஸ்தைக்குள்ளாவதாகவும் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த சந்தைக்கென மலசலகூட வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு வியாபாரிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (104)

# பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கடற்தொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியில் கீழ்க்காணும் பயிற்சி நெறிகள் ஆரம்பமாக வுள்ளன.

மூன்று மாத முழுநேர மாலுமி சான்றிதழ் பயிற்சி நெறிக்கான பயிற்சிக் கட்டணம் ரூபா 12,000.

10 நாட்களுக்குரிய கடல் வரைபடம் வாசித்தல் தொடர்பாடல், செய்மதி உபகரணம் இயக்குதல் பயிற்சி நெறிக்கான பயிற்சிக்கட்டணம் ரூபா 3000/-. மூன்று மாதம் வாரத்தில் இரு நாட்கள் கடலக மீன்பிடி தொழில்நுட்ப பயிற்சிநெறிக்கான பயிற்சிக் கட்டணம் ரூபா 1000/-. மூன்று மாதம் வாரத்தில் இருநாட்கள் கடலக இயந்திர தொழில்நுட்ப பயிற்சிநெறிக்கான பயிற்சிக் கட்டணம் ரூபா 1000/-.

ஒன்பது மாத முழுநேர டிப்ளோமா டெக் அலுவலகர் பயிற்சி நெறிக்கான பயிற்சிக் கட்டணம் ரூபா 20,000.

மேற்படி பயிற்சி நெறிகளில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தி அல்லது பயிற்சி பெறும் துறையில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

மூன்று மாத காலத்தில் இரு நாட்கள் பெண்களுக்கான கடலக தொழில்நுட்ப பயிற்சி நெறிக்கான பயிற்சிக் கட்டணம் ரூபா 1000/-. நாலுமாத முழுநேர கடலக கலங்கள் பயிற்சிநெறிக்கான பயிற்சிக் கட்டணம் ரூபா 15,000/-.

22 நாட்களுக்குரிய வெளியிணைப்பு இயந்திரம் திருத்துதல், பராமரிப்பு பயிற்சி நெறிக்கான பயிற்சிக் கட்டணம் ரூபா 5000/-.

மேற்படி பயிற்சி நெறிகளில் பயில விரும்புபவர்கள் தரம் 8 சித்தி அல்லது பயிற்சி சார்ந்த துறையில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்படி பயிற்சிநெறிகளில் பயில விரும்புபவர்கள் கல்லூரி அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாமென கல்லூரி அதிபர் எஸ்.ஜெபஸ்தியாம்பிள்ளை அறிவித்துள்ளார். (70)

# ஆளுங்கட்சி ஆதரவாளரிடையே மோதல்
# நடவடிக்கை எடுக்கத் திணறும் பொலிஸார்

(கொழும்பு)

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் ஆளுங்கட்சியின் வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் தங்களுக்கிடையில் பரவலாக மோதிக் கொள்வதால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாமல் பொலிஸார் திணறி வருகின்றனர்.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் களனித் தொகுதியில்கூட அண்மையில் இரண்டு வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் மோதிக் கொண்டுள்ளனர்.

சபுகஸ்கந்தையில் இடம்பெற்ற மோதலின்போது ஒரு தரப்பினரின் தாக்குதலுக்கு இலக்கான மற்றைய குழுவினரில் ஐவர் காயமடைந்துள்ளனர். அதுபற்றிப் பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சில நாட்களுக்கு முன் காலி மாவட்டத்தில் ஆளுங்கட்சியின் இரண்டு வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் மத்தியில் ஏற்பட்ட மோதலின்போது துப்பாக்கிப் பிரயோகமும் இடம்பெற்றிருந்தது. அது தொடர்பாகவும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆயினும், அவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸார் எதுவித நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலையில் உள்ளனர்.

# அடையாள அட்டை விநியோகம்
# அரசு எதிர்ப்பு என்கிறது திவயின

(கொழும்பு)

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் விநியோகித்து வரும் தேசிய அடையாள அட்டை தொடர்பில் இலங்கை அரசாங்கம் தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாக திவயின தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது - இலங்கையின் நிலப்பரப்பில் மூன்றில் இரண்டு பங்கு நிலம் ஈழம் என குறிப்பிடப்பட்டு வெளியிடப்படும் இந்த அடையாள அட்டையை விநியோகிக்க அமெரிக்க அரசாங்கம் இடமளித்துள்ளது.

நீர்கொழும்பு முதல் கதிர்காமம் வரையிலான பிரதேசங்கள் ஈழத்திற்குள் அடங்கும் வகையில் தேசப்படமும் குறித்த அடையாள அட்டையில் அச்சிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் உலகில் இல்லாத நாடு ஒன்றுக்காக தேசிய அடையாள அட்டைகளை வழங்குவது சட்டவிரோதமானது.

அமெரிக்காவில் வசிக்கும் விஸ்வநாதன் ருத்ரகுமாரனுக்கு அமெரிக்கா இந்த சட்டவிரோத நடவடிக்கையை மேற்கொள்ள இடமளித்துள்ளது.

# முதுகெலும்பு இல்லாத நிலையில் செயற்படும் ஊடகவியலாளர்கள்



(கொழும்பு)

இலங்கையின் பெரும்பாலான ஊடகவியலாளர்கள் முதுகெலும்பு அற்றவர்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது சாடியுள்ளார்.

அரசாங்கத்துக்கு எதிரான செய்திகளை வெளியிடுவதில் பல ஊடகவியலாளர்கள் தயக்கம் காட்டுவதாகவும், அதன காரணமாக உண்மைகள் குழிதோண்டிப் புதைக்கப்படுவதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் மறைந்த அமைச்சா பெ.சந்திரசேகரனின் மறைவு குறித்த அனுதாபப் பிரேரணை மீது கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.


ஒரு காலத்தில் துணிச்சலாக செய்திகளை வெளியிட்டு வந்த டெயிலி மிரர் பத்திரிகையின் ஆசிரியர் சம்பிக்க லியனாராச்சிகூட தற்போது கண்டபடி முதுகை வளைத்து அரச தரப்பினருக்குக் கூழைக் கும்பிடு போடத் தொடங்கியுள்ளதாக அவர் மேலும் குற்றம் சாட்டுகின்றார்.

அவ்வாறான செயற்பாடுகள் மூலம் பத்திரிகையாளர்கள் பெரும் அநீதியிழைப்பதாகக் கண்டனம் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, மறைந்த அமைச்சர் சந்திரசேகரன்கூட அவ்வாறான விடயங்களால் பாதிக்கப்பட்டிருந்ததாக தெரிவித்தார்.

அத்துடன் பெரும்பான்மையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் பெரும்பாலான ஊடகங்கள் இனவாதக் கண்ணோட்டத்துடன் செய்திகளைப் பிரசுரிப்பதாகவும் விமர்சித்துள்ள ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்தாலும் சிறுபான்மை அரசியல் தலைவர்களுக்கு எதிராகப் பல ஊடகங்கள் இனவாதக் கண்ணோட்டத்துடன் நடந்து கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

# அமைச்சர் மேர்வினுக்கு தொண்டை அடைப்பு
# சிகிச்சைக்குச் செல்ல ஜனாதிபதி அறிவுரை

(கொழும்பு)



அமைச்சர் மேர்வின் சில்வாவுக்குத் தொண்டையில் அடைப்புண்டாகி சிரமப்படுகின்ற நிலையில் அமெரிக்கா சென்று அதற்கான சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவுரை வழங்கியுள்ளார்.

அரசாங்கத்தினுள் தனக்காகக் குரல் கொடுக்கக் கூடியவர்கள் அமைச்சர்களான மேர்வின் சில்வா மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் தான் என்று பாராட்டியுள்ள ஜனாதிபதி அவர்கள் இவருடைய குரல்களையும் பாதுகாக்க தான் எவ்வளவு பணம் செலவழிக்கவும் தயார் என்றும் தெரிவித்தார்.

அமைச்சர்கள் பலர் முன்னிலையில் ஜனாதிபதி அதனைக் கூறியபோது அமைச்சர் மேவின் சில்வாவும் பக்கத்தில் இருந்துள்ளார்.

அந்த வகையில் அமைச்சர் மேர்வின் சில்வா மற்றும் விமல் வீரவன்ச ஆகியோரின் குரல்களைப் பாதுகாக்க அமெரிக்கா மட்டுமன்றி உலகின் எந்த நாட்டுக்கு அனுப்புவதற்கு வந்தாலும் அரசாங்கப் பணத்தில் அவர்களுக்கான சிகிச்சையைப் பெற்றுக் கொடுக்க தான் பின்நிற்கப்போவதில்லை என்றும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். அமைச்சர் மேர்வின் சில்வாவையும் சிகிச்சைக்காக அமெரிக்கா செல்லுமாறு ஆலோசனை கூறியுள்ள ஜனாதிபதி, அதற்கான செலவை ஜனாதிபதி நிதியத்திலிருந்து வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

# அடிமட்டத்திலுள்ளவர்களின் கருத்துக்கள் அதிகாரப் பரவலின்போது பெறவேண்டும்
## இந்திய பொது நிர்வாகப் பணிப்பாளர் ஹூஜா

(கொழும்பு)

அதிகாரப் பரவலாக்கத்தின்போது அடிமட்டத்திலுள்ளவர்களின் கருத்துக்களும் பெறவேண்டும் என இந்திய பொது நிர்வாக நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ராகேஷ் ஹூஜா தெரிவித்தார்.

அரசியலமைப்புக் கற்கை நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பிலான தேசிய மன்றம் தம்புள்ள, கன்டலம் அமாயா ஹோட்டலில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய முதல் நாள் அமர்வில் சிறப்புரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்திய நிர்வாகத் துறையில் 36 வருடங்கள் கடமையாற்றிய அனுபவமிக்கவரான கலாநிதி ஹூஜா அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

அதிகாரப் பரவலாக்கம் அவசியம் என்பதற்காக மேற்கொள்ளக்கூடாது. நோக்கங்களை அறிந்தே அதிகாரப் பரவலாக்கம் மேற்கொள்ளப்படும். இன்றைய காலகட்டத்திலுள்ள அரசியல் வாதிகள் சிறப்புரிமைகளையும் சலுகைகளையுமே எதிர்பார்க்கின்றார்கள். அவர்கள் மீதுள்ள பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள ஒருபோதும் தயாரில்லை. அபிவிருத்தி தொடர்பான தீர்மானங்கள் அடிமட்டத்திலிருந்தே எடுக்க வேண்டும் ஆனால், இன்று அவ்வாறு நடப்பதில்லை.


தீர்மானங்கள் மத்திய அரசினால் தலைநகரிலிருந்து எடுக்கப்படுகின்றன.

இத்தீர்மானங்களை அடிமட்டத்திலுள்ள மக்கள் மத்தியில் அமுல்படுத்தத் தயாராகும்போது பல சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

மத்திய அரசு, மாகாண அரசு மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் என்பனவற்றுக்கிடையில் நெருங்கிய உறவு பேணப்படவேண்டும். இதனூடாக மக்களுக்கு நிறைய அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும்.

மத்திய அரசுகள் எப்போதும் தனக்குக் கீழுள்ள அரசுகளைக் கட்டுப்படுத்த முயற்சிக்கின்றன என அவர் தெரிவித்தார்.

# தாய்லாந்து முன்னாள் பிரதமர் இலங்கைக்கு இரகசிய விஜயம்



(கொழும்பு)

தாய்லாந்து முன்னாள் பிரதமர் தக்ஷின் சினவத்ரா அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் ஒருவருடன் ரகசிய பேச்சுவார்த்தை ஒன்றை நடத்துவதற்காக கடந்த வியாழக்கிழமை இரவு இலங்கைக்குச் சென்று நேற்று அதிகாலை மீண்டும் துபாய் நோக்கி புறப்பட்டுச் சென்றுள்ளார்.

பாரிய ஊழல் மோசடி குற்றச்சாட்டில் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட அவர், தாய்லாந்தில் இருந்து வெளியேறி, தனது மனைவியுடன் துபாயில் வசித்து வருகிறார்.

தனிப்பட்ட ஜெட் விமானம் ஒன்றில் அவர் இலங்கை சென்றிருந்தார். அவரது இலங்கை விஜயத்தை இரகசியமாக வைத்துக் கொள்ள இலங்கை அரசாங்கத்தின் முக்கியஸ்தர் விசேட வேலைத் திட்டம் ஒன்றை செய்துள்ளார். தான் சம்பாதித்த பணத்தில் ஒரு பகுதியை சினவத்ரா இலங்கையில் முதலீடு செய்துள்ளார். அவர் தாய்லாந்தின் பிரதமர் பதவியில் இருந்து அகற்றப்பட்ட பின்னர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பில் ராஜபக்ஷவை சந்திக்க பல முறை இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். அத்துடன் சினவத்ரா கடந்த வருடம் தனது பிறந்த தினத்தை இலங்கையில் கொண்டாடி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ள நிவாரணப் பணிப் போர்வையில் அரசுக்கு எதிராக நிறுவனங்கள் சதியாம்

(கொழும்பு)

இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவென வருகை தந்திருக்கும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் அரசாங்கத்துக்கெதிரான தகவல்களைத் திரட்டி வருவதாகப் புலனாய்வுத் துறையினர் தெரிவிக்கின்றனர்.


இலங்கை அரசாங்கம் மற்றும் படைகளுக்கு எதிரான தகவல்கள் மற்றும் தடயங்களைத் திரட்டுவதில் அவ்வாறான சில தொண்டு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளதாக புலனாய்வுத் துறையினரின் விசாரணைகளின் போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன் ஒரு கட்டமாக அமெரிக்கத் தொண்டு நிறுவனமொன்றின் முக்கியஸ்தர்களுக்கு இலங்கை அரசாங்கம் மற்றும் இராணுவத்திற்கு எதிரான தகவல்களைக் கையளிக்க முயன்ற ஐவர் அண்மையில் தம்புள்ளையில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த அவர்கள் ஐவரையும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

அவர்களிடமிருந்து அரச விரோதத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முயன்ற அமெரிக்கத் தொண்டு நிறுவனம் தொடர்பான விசாரணைகள் தறபோது முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், விசாரணைகளின் முடிவில் அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்படும் பட்சத்தில் நாட்டை விட்டும் வெளியேற்றப்படுவர் என்றும் அறிய முடிகின்றது.

# இறுதிப் போட்டி இன்று





(யாழ்ப்பாணம்)

வீ.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இன்று காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறுகின்றது.

யாழ். சென்றல் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு யாழ். பல்கலைக்கழக அணியும் சென்றல் அணியும் தெரிவாகின.

தொடர்ச்சியாக கடந்த ஏழு ஆண்டுகளாக இப்போட்டித் தொடரை நடத்தி வரும் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம், இந்த ஆண்டு எட்டாவது முறை என்பது குறிப்பிடத்தக்குது.

இத்தொடரில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 12 முன்னணி அணிகள் பங்கு கொண்டமை தெரிந்ததே.

இதேவேளை, கழக மட்டத் தரப்படுத்தலில் இவ்விரு அணிகளும் முன்னணி நிலையிலுள்ளமையால் இப்போட்டி ரசிகர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தும் என நம்பப்படுகின்றது.

## மத்தியஸ்தர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் கூட்டம் இன்று முற்பகல் 10.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகவும், ஆதலால் அழைப்பிதழ் அனுப்பப்பட்ட அனைவரையும் சமுகமளிக்குமாறும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (17)




# தவறான அணுகுமுறை கனவாகிவிடும்



(சிட்னி)

சச்சினுக்காக உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்பது இந்திய அணியின் தவறான அணுகுமுறை. தனிப்பட்ட நபருக்காக அல்லாமல் நாட்டு மக்களுக்காக கிண்ணத்தை வெல்ல வேண்டும் என ஸ்ரீவோ தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்த ஒரு தனிநபரையும் விட விளையாட்டு என்பது பெரியது. தேசிய அணியில் பங்கேற்கும் வீரர்கள், ஒரு வீரருக்காக கிண்ணத்தை வெல்ல வேண்டியதில்லை. இது சரியான அணுகுமுறையும் அல்ல. இந்த தொடரில் சச்சின், நட்சத்திர வீரராக பிரகாசிக்க முடியாமல் போகலாம். ஆனால், முக்கியமான நேரங்களில் இவர்தான் உபயோகமாக இருப்பார். தொடரின் முதல் சில போட்டிகளின் முடிவுகளை வைத்து எந்த முடிவுக்கும் வரத் தேவையில்லை. பனிப்பொழிவு இருப்பதால், காலிறுதி போன்ற நிலையில், நாணயச் சுழற்சி முக்கிய பங்கு வகிக்கும் என்றார்.

# 50 ஓவர்களும் விளையாட ஆசை



(புதுடில்லி)

உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் 50 ஓவர்களும் முழுமையாக விளையாட முயற்சிப்பேன் என்று இந்திய அணியின் அதிரடி தொடக்க ஆட்டக்காரர் சேவாக் தெரிவித்தார். பெங்களூரில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள அவர், இதுகுறித்து மேலும் கூறியிருப்பது:

ஒருநாள் போட்டிகளில் நான் இதுவரை 50 ஓவர்கள் முழுமையாக விளையாடியதில்லை என்று நினைக்கிறேன். அதிகபட்சமாக 43 அல்லது 44 ஓவர்கள் விளையாடியிருப்பேன். ஆனால் இந்த முறை 50 ஓவர்களும் முழுமையாக விளையாடி இந்திய அணிக்கு சிறப்பான தொடக்கத்தை ஏற்படுத்திக் கொடுக்க முயற்சிப்பேன். எதிர்பார்ப்புகள் அதிகம் இருக்கும் என்றாலும், நெருக்கடியைப் பற்றி கவலைப்படுவதில்லை. எந்தச் சூழ்நிலையிலும் நெருக்கடியைப் பற்றி நினைக்காமல் இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்துமாறு டோனியும், பயிற்சியாளர் கிர்ஸ்டனும் என்னிடம் தெரிவித்துள்ளனர். அவர்கள் இருவரும் என்னுடைய வழியில் என்னை விட்டுவிட்டனர். அதனால் எனக்கு எவ்வித நெருக்கடியும் இல்லை. ஓட்டங்கள் குவித்தாலும், குவிக்காவிட்டாலும் மகிழ்ச்சியாக இரு என்றே அவர்கள் இருவரும் என்னிடம் கூறியுள்ளனர் என்றார்.

# போட்டி அட்டவணை வெளியீடு

கரைச்சிப் பிரதேச உதவி அரசாங்க பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கான விளையாட்டுப் போட்டிகளுக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு: நாளையும் நாளை மறுதினமும் ஆண்களுக்கான பத்து ஓவர்களைக் கொண்ட 11 பேருக்கான மென்பந்துப் போட்டி கனகபுரம் விளையாட்டு மைதானத்திலும், 16, 17ஆம் திகதி பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டித் தொடர் கனகபுரம் விளையாட்டு மைதானத்திலும், 18ஆம் திகதி ஆண்களுக்கான கபடி கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்திலும், 19ஆம் திகதி பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்திலும், 20ஆம் திகதி பெண்களுக்கான எல்லே, கபடி மற்றும் ஐந்து ஓவர்களைக் கொண்ட ஆறு பேர் கொண்ட பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டி கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்திலும், 21, 22ஆம் திகதி ஆண்களுக்கான எல்லே மற்றும் 24, 25ஆம் திகதி ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடர் ஆகிய கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்திலும் நடைபெற ஏற்பாடகியுள்ளன.


இப்போட்டிகள் யாவும் அறிவிக்கப்பட்ட நாட்களில் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும் என்றும், குறித்த நேரத்திற்கு கலந்து கொள்ளும் அணிகளைத் தவறாது சமுகமளிக்குமாறும் கரைச்சி பிரதேச உதவி அரசாங்க பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் எஸ். குமார் தெரிவித்தார். (எஸ்)

# ஒரு நாள் போட்டியில் ஓய்வு

(லண்டன்)

இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீரர் கெவின் பீட்டர்சன் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் பின்னர் சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் டெஸ்ட் போட்டிகள் மற்றும் இருபதுக்கு இருபது போட்டிகளில் தொடர்ந்து விளையாட எதிர்ப்பார்ப்பதாகவும் தனது குடும்பத்துடன் அதிக நேரத்தினைச் செலவிடுவதற்காகவே அவர் இம்முடிவை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




கடந்த சில மாதங்களாக பீட்டர்ஸன் ஒருநாள் போட்டிகளில் பெரிதாகப் பிரகாசிக்கவில்லை. மேலும் காயம் காரணமாக பெரிதும் அவதிப்பட்டு வந்தார்.

ஒருநாள் போட்டிகளில் 50 ஆக இருந்த அவரது ஓட்ட சராசரி 41 ஆக வீழ்ச்சியடைந்தது.

## உலகக் கிண்ண பயிற்சிப் போட்டி

### இலங்கை எதிர் நெதர்லாந்து

கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானாம்
நாணயச் சுழற்சி வெற்றி இலங்கை
முதலில் துடுப்பாட்டம்
இலங்கை 351/05 (50ஓவர்)
நெதர்லாந்து 195 (47.3 ஓவர்)
156 ஓட்டங்களால் இலங்கை வெற்றி.



### மேற்கிந்தியத்தீவு எதிர் கென்யா

கொழும்பு பிரேமதாச மைதானாம்
நாணயச் சுழற்சி வெற்றி கென்யா
முதலில் களத்தடுப்பு
மேற்கிந்தியத்தீவு 253/08 (50 ஓவர்)
கென்யா 192 (45.3 ஓவர்)
61 ஓட்டங்களால் மேற்கிந்தியத்தீவுகள் வெற்றி.



## உலகக் கிண்ணக் கிரிக்கெட்

# எதிர்பாராதது

**தினமொரு தகவல்**

இறுதிப் பதினைந்து தேசிய அணி வீரர்களின் ஐ.சி.சி.யிடம் வழங்கிய பின்னரும், சில அணிகளில் முடியாதபடி அணி வீரர்கள் விலகிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இவ்வகையில் காயங்கள் காரணமாக மைக்ஹசி மற்றும் சுழற்பந்து வீச்சாளர்கள் நெதன் ஹுரிட்ஸ் இருவரும் விலகிக் கொள்ள அந்த இடத்தை கலம் ே பர்குகன் மற்றும் ஜேசன் கிரெய்ஜா இருவரும் நிரப்புகிறார்கள். மைக் ஹசியின் வெளியேற்றம் அவுஸ்ரேலிய துடுப்பாட்ட வரிசையில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது வெளிப்படை.


அடுத்து இங்கிலாந்து அணியின் புதிய நட்சத்திரம் இயன் மோர்கனும் காயங்களால் வெளியேற அந்த இடத்தை நிரப்ப ரவி போப்பாரா தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதேவேளை, இந்தியாவின் பந்து வீச்சாளர் பிரவீன்குமார் முழங்கை முறிவையடுத்து நீக்கப்பட அந்த இடத்தை சிறிசாந்த் நிரப்புகின்றார்.

பாகிஸ்தான் அணியிலும் ஒரு மாற்றம் ஏற்படுகின்றது. உபாதைகளால் பந்து வீச்சாளர் சொகைய்ல் டன்வீர் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட அந்த இடத்தை ஜுனெய்ட்கான் நிரப்புகிறார்.

இன்னொரு சிம்பாப்வே வீரர் ஷோன் ஏர்வின் தேசிய அணியிலிருந்து விலகி, தான் விளையாடும் இங்கிலாந்து ஹம்பஷயர் கவுன்ரியில் தொடர உத்தேசித்துள்ளார். காரணம் தெரியவில்லை.

எது எவ்வாறாயினும் உள்நுழைந்தவர்களின் மகிழ்ச்சிக்கு அளவே இராது என்பது சொல்லித்தான் தெரிய வேண்டுமா என்ன?


ICC Cricket World Cup 2011



## உலகக் கிண்ண பயிற்சிப் போட்டி

### தென்னாபிரிக்கா எதிர் சிம்பாப்வே

சென்னை மைதானாம்
நாணயச் சுழற்சி வெற்றி சிம்பாப்வே
முதலில் துடுப்பாட்டம்
சிம்பாப்வே 152 (41.5 ஓவர்)
தென்னாபிரிக்கா 153/2 (23.3 ஓவர் )
8 விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்கா வெற்றி.



### பங்களாதேஷ் எதிர் கனடா

சிட்டகெங் மைதானம்
நாணயச் சுழற்சி வெற்றி பங்களாதேஷ்
முதலில் களத்தடுப்பு
கனடா 112 (37.3 ஓவர்)
பங்களாதேஷ் 113/1 (19.2 ஓவர் )
9 விக்கெட்டுக்களால் பங்களாதேஷ் வெற்றி.

### நியூசிலாந்து எதிர் அயர்லாந்து

நாக்பூர் மைதானம்
நாணயச் சுழற்சி வெற்றி அயர்லாந்து
முதலில் களத்தடுப்பு
நியூசிலாந்து 311/6 (50 ஓவர்)
அயர்லாந்து 279 (48.2 ஓவர் )
32 ஓட்டங்களால் நியூசிலாந்து வெற்றி.

**நேற்று இடம்பெற்ற அனைத்து பயிற்சிப் போட்டிகளும் பகலிரவு ஆட்டமாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.**

# முபாரக்கின் பதவி விலகலை அடுத்து மகிழ்ச்சி வெள்ளத்தில் எகிப்து மக்கள்



(கெய்ரோ)

எகிப்தில் ஜனாதிபதி முபாரக் பதவி விலகியதையடுத்து அந்நாட்டு மக்கள் மகிழ்ச்சிப் பரவசத்தில் மூழ்கியுள்ளனர்.

பிரதான போராட்ட இடமான தஷ்கீர் சதுக்கத்திலுள்ள மக்கள் தமது மகிழ்ச்சியை வெளிக்காட்டும் வகையில் ஆடல் பாடல்களில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, தஷ்கீர் சதுக்கத்தைச் சுற்றி அமைந்திருந்த தடுப்புப் பாதுகாப்பு வளையங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 18 நாட்களாக தாம் நடத்திய போராட்டம் பெரு வெற்றி பெற்றுள்ளதாகவும், தமது இந்தப் போராட்டம் ஒவ்வொரு சர்வாதிகாரியின் ஆட்சிக்கும் முடிவுகட்டுவதற் கான தருணமெனவும் போராட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் தெரிவித்தார்.

எகிப்திய மக்கள் வன் செயல் எதனையும் மேற்கொள்ளாமல் இந்த மாற்றத்தை மேற்கொண்டுள்ளதாகவும் எகிப்து இவ்வாறான நிலைமைக்கு மீண்டும் திரும்பாதென அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நம்பிக்கை தெரிவித்தார். அத்துடன் எதிர்ப்பில் ஈடுபட்ட மக்கள் ஜனநாயகப் பாதைக்குத் திரும்ப வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை, எகிப்தில் முபாரக்கின் ஆட்சி முடிவுக்கு வந்த நிலையில் அங்கு அமைதி நிலை ஏற்படாவிட்டால அது நாட்டை மேலும் பயங்கரமான நிலைக்கு இட்டுச் சென்றுவிடுமென சீனா எச்சரித்துள்ளது.

எகிப்து மற்றும் துனீசிய மக்களின் ஆர்ப்பாட்டங்கள் மூலம் நீண்ட நாள் ஆட்சி அதிகாரங்கள் அகற்றப்பட்டமையானது ஏனைய அரபு நாட்டுத் தலைவர்களுக்கு இலகுவான செய்தியாக இருக்க மாட்டாதெனத் தெரிவிக்கப்படுகிறது.

# பெனாசீர் பூட்டோ கொலை வழக்கு முஷாரப்பிற்கு பிடியாணை பிறப்பிப்பு



(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ படுகொலை வழக்கில், முன்னாள் ஜனாதிபதி முஷாரப்புக்கு ராவல்பிண்டி பயங்கரவாதத் தடுப்பு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

கடந்த 2007ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் திகதி ராவல்பிண்டியில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ படுகொலை செய்யப்பட்டார்.

பெனாசிர் பூட்டோ படுகொலை வழக்கில் கடந்த வாரம் இடைக் காலக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அதில் பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்புக்கு, பெனாசிர் கொலையில் தொடர்பிருப்பதாகக் கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில் ராவல்பிண்டி பயங்கரவாதத் தடுப்பு நீதிமன்றம், முஷாரபுக்கு பிடியாணை பிறப்பித்துள்ளது. அத்துடன் பெப்ரவரி 19ஆம் திகதியன்று நீதிமன்றில் ஆஜராகும்படி அவருக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

# சிலியில் நிலநடுக்கம்



(சான்டியாகோ)

அமெரிக்காவின் புவியியல் ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், சிலியில் நேற்றுப் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டதாக கூறப்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவு கோலில் 6.7 ஆக பதிவாகியிருந்தது. உயிர் மற்றும் பொருட்சேதங்கள் இல்லை என தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. சுனாமி எச்சரிக்கை ஏதும் அறிவிக்கப்படவில்லை என்றாலும் பாதிப்புக்குள்ளான பகுதிகளிலுள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழனன்று இரு முறை ஏற்பட்ட நில அதிர்வுகள் உட்பட, கடந்த சில தினங்களாகவே சிலியின் பூகம்ப ஆபத்து பகுதிகளில் நிலநடுக்கம் உணரப்பட்டு வந்தது. கடந்த பெப்ரவரியில் வடக்கு சிலியின் கடலோரப் பகுதியில் ஏற்பட்ட நில நடுக்கத்திற்கு சுமார் 500 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது.


## புலமைபெறும் மாணவர்களின் ஒரே முரசு..."கல்விமுரசு"

**2011 ஆம் ஆண்டு தரம்-05** புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முற்றிலும் எதிர்பார்க்கத்தக்க மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள்

## கல்வி முரசு



தேசிய ரீதியில் தொடர்ந்து முதல் இடங்களைப் பெற்ற மாணவர்கள் பயிற்சி பெற்ற முன்னோடி வினாத்தாள்களை வெளியிட்ட வெளியீட்டு நிறுவனங்களிடமிருந்தும் மற்றும் தேசிய ரீதியில் முதல் இடங்களைப் பெற்ற மாணவர்களை நெறிப்படுத்திய பாடசாலைகளில் இருந்து பெறப்படும் வினாத்தாள்களே எமது கல்வி முரசு ஊடாக வெளிவரும்.

## 14.02.2011 முதல் வெளிவருகின்றது..

வாரம் தோறும் எமது புலமை முரசு மாணவர்களின் கையில்......

| திங்கள் | புதன் | வெள்ளி |
| --- | --- | --- |
| பகுதி -I (4 பக்கம்) | பகுதி -II (4 பக்கம்) | பகுதி -I, II (விடைகளும், புள்ளியிடலும்) |

எமது கல்வி முரசின் சேவைகள் அனைத்தும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ....... **இலவசம்**

எட்டுத் திசையும் கொட்டட்டும் கல்வி முரசு

தரம்-05 மாணவர்களுக்கான முன்னோடி பயிற்சிப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாளைப் பெறவிரும்பும் பெற்றோர்கள் அருகிலுள்ள "தினமுரசு" விற்பனை முகவரிடம் முற்பதிவு செய்து உங்கள் பிரதி கிடைப்பதை உறுதிப்படுத்தவும்.

பாடசாலைகளில் ஆசிரியர்களின் சிறப்பான வழிகாட்டலுடன் வெற்றிபெறும் மாணவர்களுக்கு மேலும் தங்கள் புள்ளியை உயர்த்த வீட்டில் இரவு வேளைகளில் பெற்றோரின் உதவியுடன் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்படுத்துவதற்கான விசேட முன்னோடிப் பரீட்சை "கல்வி முரசு"


எம்மால் வாரம்தோறும் வெளியிடப்படும் வினாத்தாள்களைப் பெற்று பயன்பெறும் மாணவர்களுக்கு அரசால் நடாத்தப்படும் பரீட்சையில் முன்னணியில் உள்ள மாணவர்கள் கல்விமுரசு வாராந்தப் பயிற்சி பெற்ற வினாத்தாள்களை உறுதிப்படுத்தின் துவிச்சககர வண்டிகள் மற்றும் பெறுமதிமிக்க பரிசில்கள், சான்றிதழ்கள வழங்கிக் கௌரவிக்கப்படும்.

வெற்றி நிச்சயம்

திரு.தி.சுப்பிரமணியம், ஆசிரியர், கல்விமுரசு

தினமுரசு காரியாலயம், 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


# அதிகாரி விடுவிக்கப்படாவிடின் தூதுவர் வெளியேற்றப்படுவார் அமெரிக்கா எச்சரிக்கை



(இஸ்லாமாபாத்)

லாகூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அமெரிக்க அதிகாரி ரேமாண்ட் டேவிஸ் (36) உடனடியாக விடுவிக்கப்படாவிட்டால், பாகிஸ்தான் தூதுவரை வொஷிங்டனிலிருந்து வெளியேற்றுவோம் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்திருப்பதாக செய்தி வெளியாகியிருக்கிறது.

இந்த நிலையில், டேவிஸ் 14 நாள் காவலில் வைக்க பாகிஸ்தான் நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டிருப்பதால், இருதரப்பு உறவில் பதற்றம் ஏற்பட்டிருக்கிறது.

டேவிஸ் கைது தொடர்பாக அமெரிக்காவுக்கான பாகிஸ்




தான் தூதுவர் ஹுசைன் ஹக்கானியை நேரில் அழைத்துக் கண்டித்த அமெரிக்கப் பாதுகாப்பு ஆலோசகர் டொம் டோனிலன், உடனடியாக டேவிஸ விடுவிக்காவிட்டால், உங்களை நாட்டைவிட்டு வெளியேற்றி விடுவோம், பாகிஸ்தானிலுள்ள தூதரகத்தை உடனடியாக மூடுவோம். உங்கள் ஜனாதிபதி சர்தாரியின் வொஷிங்டன் பயணத்தை ரத்து செய்வோம் என்று எச்சரித்ததாக பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தகவலை அமெரிக்க அதிகாரிகள் யாரும் அதிகாரபூர்வமாக உறுதி செய்யவில்லை. எனினும் இதுபற்றி இஸ்லாமாபாத்திலுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டிருக்கும் செய்திக் குறிப்பில், தனிப்பட்ட அரசு முறை பேச்சு பற்றி எதுவும் தெரிவக்க முடியாது. எனினும் வெளியாகியிருக்கும் தகவல் துல்லியமானது அல்ல என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதனிடையே, அமெரிக்கா எச்சரித்திருப்பதாக வெளியாகியிருக்கும் தகவலை அமெரிக்காவுக்கான பாகிஸ்தான் தூதுவர் ஹக்கானி மறுத்திருக்கிறார். அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் உள்ளிட்ட எந்த அமெரிக்க அதிகாரியும் எனக்குத் தனிப்பட்ட வகையில் எந்த எச்சரிக்கையும் விடுக்கவில்லை, வரம்புமீறிப் பேசவும் இல்லை என ட்விட்டர் இணையதளம் மூலமாக அவர் கூறியிருக்கிறார்.

பொதுசன நூலகம்



# தமிழர் மீதான வழக்குகளை வாபஸ் பெறுமாறு கோரிக்கை

(பெங்களூர்)

இலங்கை அமைச்சரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தியதால் கைது செய்யப்பட்ட 42 தமிழர்கள் மீதான வழக்குகளை வாபஸ் பெற வேண்டும் என கர்நாடக முதல்வர் எடியூரப்பாவிற்கு கர்நாடக தமிழ் அமைபபுகளின் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து எடியூரப்பாவிற்கு மனு அனுப்பப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -


கடந்த டிசம்பர் 10 ஆம் திகதி பெங்களூர் அரண்மனை மைதானத்தில் சர்வதேச ஆயுர்வேத மாநாடு நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட இலங்கை சுகாதாரத்துறை அமைச்சர் சலிந்த திசநாயகேக்கு எதிராக தமிழ் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட 42 பேரை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர். ஒருவாரம் சிறையில் இருந்த அவர்கள் பிறகு ஜாமீனில் வெளிவந்தனர். இலங்கையில் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்த ராஜபக்ஷவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அவரது அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள சலிந்த திசநாயகேயின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைதி வழியில் இப் போராட்டம் நடத்தப்பட்டது.

எனவே, தமிழ் அமைப்புகளைச் சேர்ந்த 42 பேர் மீதும் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் பெறும் படி அந்த மனுவில் கோரபப்பட்டுள்ளது.

பெங்களூரில் முதல்வர் எடியூரப்பாவை கர்நாடக தமிழ் அமைப்புகளின் கூட்டமைப்பாளர்கள் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்.

மேலும், 2009 ஆம் ஆண்டில் ஈழத்தில் நடந்தேறிய படுகொலைகள் அடங்கிய படகோப்புகளையும் அளித்தனர். படக்கோப்புகளை பெற்றுக்



கொண்ட முதல்வர் எடியூரப்பா இது குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார் என்று கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

# திருப்பதி கோவில் உண்டியலில் 1175 கிலோ தங்கம் காணிக்கை

(நகரி)

திருப்பதி கோவில் உண்டியலில் இந்த வருடத்தின் ஜனவரி மற்றும் இந்த மாதத்தில் மட்டும் 1175 கிலோ தங்கம் காணிக்கையாகக் கிடைக்கப்பெற்றுள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு வரும் பக்தர்கள் அங்குள்ள உண்டியலில் பணம் மற்றும் தங்க நகைகளை காணிக்கையாக செலுத்துவது வழக்கம்.கடந்த சில மாதங்களாக உண்டியல் வருமானம் தினமும் ரூ.1 கோடியைத் தாண்டி வருகிறது.

இதனால் தேவஸ்தானத்திற்கு கணிசமான அளவுக்கு வருமானம் உயர்ந்துள்ளது. இதேபோல் இந்த ஆண்டு உண்டியல் மூலம் கிடைக்கும் தங்க காணிக்கையும் அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டு ,பக்தர்கள் உண்டியலில் காணிக்கையாகச் செலுத்திய மொத்த தங்கத்தின் எடை 1175 கிலோ. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 100 கிலோ தங்கம் கூடுதலாகக் கிடைத்துள்ளது. இந்த ஆண்டு கிடைத்த தங்கத்தை தேவஸ்தான அதிகாரிகள் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியில் வைப்புச் செய்தனர். இதற்கு வங்கி 1.61 சதவீத வட்டி தர ஒப்புக்கொண்டுள்ளது. கடந்த ஆண்டை விட 0.60 சதவீத வட்டியை வங்கி உயர்த்தி வழங்க முடிவு செய்துள்ளது.

# பிரதமரை எச்சரிக்கை செய்தாராம் அருண்ஷோரிக்கு காங்கிரஸ் கண்டனம்

(புதுடில்லி)


2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு தொடர்பாக 2009 ஆம் ஆண்டே பிரதமர் மன்மோகன் சிங்கிடம் எச்சரிக்கை செய்ததாக பாரதீய ஜனதா தலைவர்களில் ஒருவரும் முன்னாள் மத்திய தொலைத்தொடர்புத்துறை அமைச்சருமான அரண் ஷோரி தெரிவித்த கருத்துக்கு காங்கிரஸ் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளர் அபிஷேக் சிங்வி செய்தியாளர்களிடம் கூறியதாவது -

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு முறைகேடுகள் குறித்து பிரதமர் மன்மோகன்சிங்குக்கு தெரியாது. அவர் மீது அருண் ஷோரி ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை, பொறுப்பற்ற முறையில் தெரிவித்து வருகிறார்.

அலைக்கற்றை ஒதுக்கீட்டில், அருண் ஷோரி அமைச்சராக பதவி வகித்த தேசிய ஜன நாயக கூட்டணி அரசிலும் முறைகேடுகள் நடந்துள்ளன என்ற குற்றச்சாட்டு உள்ளது. அந்த கூட்டணி மீது நடவடிக்கை எடுக்காத வகையில், இந்தப் பிரச்சினையை திசை திருப்பும் வகையில் அவர் பேசி வருகிறார்.

2009 ஆம் ஆண்டிலேயே அலைக்கற்றை ஒதுக்கீடு முறைகேடுகள் குறித்து பிரதமர் மன்மோகன்சிங்கிடம் தெரிவித்ததாகக் கூறும் அருண்ஷோரி, 2 வருடம் கழித்து பிரதமர் மீது குற்றம் சாட்டுவது ஏன்? இது குறித்து அவர் அப்போதே



பொதுமக்கள் மன்றத்தில் தெரிவிக்காதது ஏன்?

இதுபற்றி விசாரணை நடத்திய நீதிபதி சிவராஜ் பட்டீல், தனது அறிக்கையில், 2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் அருண் ஷோரியும், அவரது தேசிய ஜன நாயக கூட்டணி அரசும் கையாண்ட முறை குறித்து குற்றம் கண்டு, கருத்து தெரிவித்து உள்ளார். இதற்குப் பிறகு, இவ்வளவு நாள் கழித்து இந்தக் குற்றச்சாட்டைக் கூறுவது திசை திருப்பும் செயல் அல் லாமல் வேறு என்ன? இவ்வளவு நாள் அவர் மௌனமாக இருந்தது ஏன்? என்றார்.

தமிழகத்தில் தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கிறது. ஆகவே, தமிழக முதல் அமைச்சர் கருணாநிதி மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எதிராக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா தெரிவித்து வரும் குற்றச்சாட்டுகளை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்றும் கூறினார்.

# கறுப்புப் பண ஊழலைத் தடுக்க வரவுள்ளது புதிய சட்டமூலம்

(புதுடெல்லி)

வெளிநாட்டு வங்கிகளில் வைப்புச் செய்யப்படும் கறுப்புப் பண ஊழலைத் தடுப்பதற்குப் புதிய சட்டமொன்றைக் கொண்டுவர மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இந்தியாவிலிருந்து கோடிக் கணக்கான பணம் வெளிநாடுகளில் கறுப்புப் பணமாக இருக்கிறது. வரி ஏய்ப்பு, சட்ட விரோத முதலீடு மூலம் கறுப்புப் பணம் வெளிநாடுகளில் குவிந்து வருகிறது.

வெளிநாடுகளில் கறுப்புப் பணம் குவிந்து வருவது குறித்து உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பி இருந்தது.

இதன் எதிரொலியாக ஊழல் மூலம் வெளிநாடுகளில் கறுப்புப் பணம் செல்வதைத் தடுக்கும் விதமாக புதிய சட்டம் ஒன்றை மத்திய அரசு கொண்டு வர இருக்கிறது.

இதற்காக அமைச்சர் சிதம்பரம் தலைமையில் 4 பேர் கொண்ட மத்திய அமைச்சர்கள் குழு ஆய்வு செய்தது. வெளிநாடுகளில் குவிந்து வரும் கறுப்புப் பணம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் மனு ஆய்வு செய்யப்படுகிறது.

ஊழல் தடுப்பு தொடர்பான இந்தப் புதிய சட்டம் விரைவில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது.




உங்கள் அன்புச் செல்வங்களின்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

தினமுரசில்

முற்றிலும் இலவசமாக!!

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது.
உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள்.
தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.



அனுப்பவேண்டிய முகவரி:
தினமுரசு
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ..............................
பெற்றோர் கையொப்பம்


## ஞாயிறு நற்சிந்தனை

### சட்டங்கள் எங்கே செல்கின்றன...?

சாமானியன் சருகை மிதித்தாலும் கூட ஓலமிடும் சமுதாயம். பசை உள்ளவன் பசுமரத்தை வேரோடும், விழுதோடும் அழிக்கும்போது மௌனம் சாதித்து விடுகிறது நீதி தேவதை. கண்ணைக் கறுப்புத்துணியால் இறுகக் கட்டிக்கொள்கிறாள். சட்டம் தன் பாதையில் சறுக்காமல் செல்லும் என்று நறுக்கென சொல்லி நாசுக்காக நழுவிவிடுவர். இப்படிப்பட்ட மனிதர்களை யெல்லாம் கடைந்து வடித்தெடுத்து உருக்கொடுத்தவைதான் இயேசுவின் போதனைகள். அவைகள் சட்டங்களைக் கடந்தவை. வெளிவேடங்களைவிட உள்ளத்து உணர்வுகளை முறைப்படுத்துபவை. மனிதனின் உடலை அல்ல. உள்ளத்தை உருவாக்குபவை. ஆகவேதான், கொலையைச் சட்டமிட்டு குறைப்பதை விட, கோபத்தைக் களையச் சொல்லுகிறார். (மத்5:22) சட்டம்போட்டு விபசாரத்தை தடுப்பதைவிட, மனதைக்கட்டுப்படுத்தி மாண்புடன் வாழச் சொல்லுகிறார். (மத்5:28) மதத்தைக் காப்பாற்ற மனிதனைக்கொல்லும் சட்டத்தை மறுபரிசீலனை செய்யும் இயேசுவின் தீவிரம், அவருள் இருக்கும் தெய்வீகத்தை நிறைவுரச் செய்வதற்காகவே.

இயேசுவின் இப்புனித பணி தொடர்ந்தால் மட்டுமே சிறியவர்கள், சார்ந்து வாழ்பவர்கள், சாமானியர்கள், சக்தியற்றவர்கள் பாதுகாக்கப்படுவர. சட்டத்தால் பயன் பெறுவர். அப்போது சட்டம் நிறைவேறும். சட்டத்தால் நிறைவு பெறுவர். இயேசுவின் போதனைகளின் படி வாழ எத்தனிப்போம்.... முயல்வோம்.... முனைந்தால் முடியும்....

யா.அலெக்சாண்டர்
மறையாசிரியர்

# மட்டக்களப்பில் ஏற்பட்ட அனர்த்தம் 3700 மில்லியன் சேதமென மதிப்பீடு



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக மேற்கொள்ளப்பட்டு வரும் சேதவிபரங்களின் அடிப்படையில் இதுவரை மேற்கொளளப்பட்ட மதிப்பீட்டுகளின் படி 3630 மில்லியன் ரூபாவுக்கு மேல நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மீள் குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விசேட மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் நலன்களை கவனிப்பதற்காக அமைக்கப்பட்ட குழுக்கள் தமது திட்டங்களை இக்கூட்டத்தில் முன் வைத்தனர்.

உணவு மற்றும் உலர் உணவு விநியோகம் தொடர்பில மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் விமலநாதன் தலைமையிலான குழு மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது உலர் உணவு வழங்க வேண்டிய பகுதிகள் தொடர்பான அறிக்கையையும், மாவட்டத்தில் வெள்ளத்தினால் சேதமடைந்த வீடுகளுக்குப்பதிலாக புதிய வீடுகளை அமைப்பது தொடர்பாக வீடமைப்பு அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் ஜெகநாதன் தலைமையிலான குழு வீடுகளை அமைப்பது தொடர்பான அறிக்கையையும், சுகாதாரம் மற்றும் தொற்றுநோய் விழிப்புணர்வு தொடர்பான அறிக்கையைப் பிராந்திய சுகாதார பணிப்பாளர் டாக்டர் சதுர்முகம் தலைமையிலான குழுவினரும், உணவற்ற பாவனைப் பொருட்கள் தொடர்பாக மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன் தலைமையிலான குழுவினரும் இதன் போது அறிக்கைகளை சமர்ப்பித்தனர்.

இதன்போது மாவட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய திட்டங்கள் தொடர்பிலும் விளக்கமளிக்கப் பட்டது.

அத்துடன் மாவட்டத்தில் மேறகொள்ளப்படவுள்ள வெள்ள அனர்தத்துக்குப் பின்னரான செயற்பாடுகளில் அரசசார்பற்ற நிறுவனங்கள் வகிக்கவுள்ள செயற்பாடுகள் தொடர்பில் கோரப்பட்டது.

மாவட்டத்தில் இதுவரையில் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 5500 இற்கும் மேற்பட்ட வீடுகள் முற்றாக அழிந்துள்ளதாகவும் 11000இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு மாவட்டத்தில் செய்கைபண்ணப்பட்ட 160,000 ஏக்கர் நெற்பயிர்ச்செய்கையில் 143,000ஏக்கர் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் மேட்டு நிலப்பயிர்செய்கையும் அழிவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம் மாவட்டத்தில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் மரணமடைந்துள்ளதாகவும் அதனால் பாதிக்கப்பட்ட கால்நடை வளர்ப்பாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

## தண்ணி காட்டியவர் இந்தியாவில் கைது

(கொழும்பு)

கடந்த 2004ம் ஆண்டு சிங்கப்பூருக்கு போதை பொருள் கடத்திச் சென்று அங்குள்ள பொலிஸாரின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டுத் தப்பியோடியவர் எனச் சந்தேகிக்கப்படும் இலங்கை பிரஜையான ஜரேமி மகான் சண்முகம் இந்தியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபரை கைது செய்ய உதவும்படி சர்வதேச பொலிஸாரை சிங்கப்பூர் பொலிஸார் கேட்டுக்கொண்டனர். இதைத் தொடர்ந்து சந்தேக நபரைக் கைது செய்யும்படி அனைத்து நாடுகளுக்கும் சர்வதேச பொலிஸார் அறிவித்தல் கடிதம் அனுப்பினர்.

இந்த நிலையில், நேற்றுமுன் தினம் மும்பை விமான நிலையத்தில் சி.பி.ஐ.யின் சர்வதேச பொலிஸார், சண்முகத்தைக் கைது செய்தனர். இது பற்றி இந்திய சி.பி.ஐ. அதிகாரிகள் சிங்கப்பூர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது



சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவின் விடுதலையைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடம் நேற்று முன்தினம் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று முன்னாள் இராணுவத் தளபதியைச் சந்தித்தது. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் கருஜெயசூரிய, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான மங்கள சமரவீர, டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன ஆகியோர் சந்தித்துவிட்டு வெளியேறுவதைக் காணலாம்.

## மன்னாரில் எண்ணெய் கிணறு அமைப்ப மூன்று நாடுகளுக்கிடையே கடும் போட்டி

(கொழும்பு)

மன்னார் கடற்பகுதியில் எண்ணெய் அகழ்வை மேற்கொள்வதில் இந்தியா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகளுக்கிடையில் கடும்போட்டி ஆரம்பமாகியுள்ளது.

மன்னார் கடற்படுக்கையில் எண்ணெய் மற்றும் எரிவாயு வளம் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ள பகுதிகளை இலங்கை அரசாங்கம் எட்டுத் துண்டங்களாகப் பிரித்துள்ளது.

இவற்றில் இரண்டு துண்டங்கள் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

முன்னதாக இந்திய அரச நிறுவனமான 'கெய்ன் இந்தியா' என்ற நிறுவனத்துக்கே இந்த துண்டம் ஒன்று வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

ஆனால் சீனாவுக்கும் ஒரு துண்டம் வழங்கப்பட்டுள்ளதாக தற்போது வெளியாகும் செய்திகள் கூறுகின்றன.

ஏனைய ஐந்து துண்டங்களையும் விரைவில் அனைத்துலக மட்டத்தில் ஏலத்தில் விற்பதற்கு இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

கடந்த ஆண்டுத் தொடக்கத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ரஷ்யா சென்றிருந்தபோது நடத்தப்பட்ட பேச்சுக்களில் மன்னார் கடற்படுக்கையில் எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வை மேற்கொள்வதற்கு ரஷ்ய அரச நிறுவனம் இணங்கியிருந்தது.

இந்தநிலையில், மன்னார் கடற்படுக்கையில் எஞ்சியுள்ள ஐந்து எண்ணெய் அகழ்வுத் துண்டங்களுக்கு அனைத்துலக அளவில் கேள்விப்பத்திரம் கோரும்போது இந்தியா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகள் கடும் போட்டியில் இறங்கவுள்ளன.

இதற்கிடையே இந்தியாவின் 'கெய்ன்' நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட துண்டத்தில் எதிர்வரும் ஜுலை மாதம் எண்ணெயக கிணறு துளையிடும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கென ஆழ்துளையிடும் கப்பல் ஒன்று மன்னார் கடற்பகுதிக்குக் கொண்டுவரப்பட்டு அது சார்ந்த ஆய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக 'கெய்ன இந்தியா' நிறுவனம் அறிவித்துள்ளது.

## இந்திய பிரதிசபாநாயகர் இலங்கைக்குப் பயணம்

(கொழும்பு)



நான்கு நாள் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டு இந்திய நாடாளுமன்ற பிரதிச் சபாநாயகர் மீராகுமார் நேற்று முன்தினம் இரவு இலங்கை வந்தடைந்தார்.

பொதுநலவாய நாடாளுமன்ற அமைப்பின் ஆசியப் பிராந்திய 3 ஆவது மாநாட்டில் கலந்து கொள்வதற்கே இவர் இலங்கை வந்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் ஆரம்பமாகிய இந்த மாநாடு எதிர்வரும் 16ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. கடந்த ஜனவரி மாதம் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணாவும் அதையடுத்து வெளிவிவகார செயலர் நிருபமாராவும் இலங்கை வந்திருந்தனர். இவர்களை அடுத்து இந்திய நாடாளுமன்ற சபாநாயகர் இலங்கை வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இம்முறையும் செல்லுபடியாகும்

(கொழும்பு)

கடந்த தேர்தலின்போது விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் செல்லுபடியாகுமென தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் கூறியுள்ளதாக பவ்ரல் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி வாக்காளர் பிரதேச கிராம சேவகரிடம் சென்று அந்த தற்காலிக அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள முடியுமென பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி அறிவித்துள்ளார்.

தேர்தலில் வாக்களிப்பதற்கு தங்களுடைய ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாத வாக்காளர்கள் எதிர்வரும் இரு மாதங்களுக்குள் புகைப்படத்துடன் கிராம சேவகரிடம் சென்று அடையாளத்தை உறுதிப்படுத்தி அதனை பயன்படுத்த முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உணவுப் பஞ்சத்தைத் தடுப்பதற்கு அரச நிறுவன நிலங்களில் பயிர்ச்செய்கை

(கொழும்பு)

உணவுப் பஞ்சத்தைத் தவிர்க்க அரச நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் அரச பணியா[illegible]ர்களின் தங்குமிடங்களைச் சுற்றியுள்ள வெற்று நிலங்களில் மரக்கறிகளைப் பயிரிடுவது கட்டாயமாக்கப்படவுள்ளது.

இதுதொடர்பான சுற்றறிக்கை ஒன்றை அரசாங்கம் வெளியிட முடிவு செய்துள்ளது.

இந்தச் சுற்றறிக்கை ஜனாதிபதி செயலகத்தினால் இரண்டொரு தினங்களில் வெளியிடப்படும் என்று விவசாய அமைச்சின் செயலாளர் கருணாதிலக தெரிவித்தார்.

பயிரிடுவதற்கு வாய்ப்புள்ள அனைத்து நிலங்களிலும் மரக்கறிகள் பயிரிடப்பட வேண்டும். இதற்கென மாகாணசபைகள் ஊடாக நிதி வழங்குவதற்கு விவசாய அமைச்சு முடிவு செய்துள்ளது.

அரச நிறுவனங்களில் குறிப்பாக அமைச்சுக்களின் பணியகங்களில் கூட முன்னுதாரணமான முறையில் மரக்கறிகள் பயிரிடப்படவுள்ளன.

இந்தச் சுற்றறிக்கையின் படி அரச நிறுவனங்கள், பாடசாலைகளின் வளவுகளில் காணப்படும் நிலத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாது போனால் அவற்றுக்குப் பொறுப்பான அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் உணவுப்பஞ்சம் ஏற்படும் ஆபத்து உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளதாலேயே அரசாங்கம் இந்த அவசர நடவடிக்கையை எடுத்துள்ளது.

## 18 ஆவது திருத்தம் வழி வகுக்காது

(கொழும்பு)

நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு 18ஆவது திருத் தச் சட்டம் மூலம் வழிவகை செய்யாது எனக் கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

17ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு அமைவாக சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். நாடாளுமன்றப் பேரவையின் சகல அதிகாரங்களை யும் மீறிச் செயற்படக்கூடிய அதிகாரம் ஜனாதிபதிக்குக் காணப்படு வதாக அவர் தெரிவித்துள்ளார்.

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு எவ்வித அதிகாரமும் கிடை யாது எனவும் சகல அதிகாரங்களும் ஜனாதிபதியை மையப்படுத தயதாக அமைந்துள்ளது. எனவே யதார்த்த பூர்வமான சுயாதீன ஆணைக் குழுக்கள் நிறுவப்பட வேண்டுமெனவும், அவர் குறிப்பிட்டார். அரசியல் சாசனத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சட்ட விரோதமான முறையில் ஆளும் கட்சியுடன் இணைந்து சில எதிர்க்கட்சி உறுப் பினர்களின் ஒத்துழைப்புடன் ஜனாதிபதி 18ஆவது திருத்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றிக் கொண்டதாக அவர் தெரிவித்தார்.

# யாழ்.பதிவாளர் அலுவலகங்கள் மார்ச் மாதம் முதல் கணினி மயம்

## துரிதமாகும் மக்கள் பணி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் எதிர் வரும் மார்ச் மாதம், முதல்வாரத்தில் இருந்து பிறப்பு இறப்புப் பதிவுகளின் கணினிப் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். செயலகப் பதிவாளர் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கென யாழ். மாவட்ட அனைத்து பிரதேச செயலகங்களிலும் பிறப்பு இறப்புப் பதிவுகள் கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

இப்பதிவு நடவடிக்கைகள், மீள் பரிசீலனை செய்யப்படும் நடவடிக்கைகள் தற்சமயம் நடைபெற்று வருவதாகவும் இது நிறைவு பெற்ற பின்னர் கொழும்பில் வைத்து அவை சகல பிரதேச செயலகங்களுக்கும் இணைக்கப்படவுள்ளது. இப்பணிகள் பூர்த்தியடைந்ததும் எதிர் வரும் மார்ச் மாதம் முதல் வாரத்தில் இருந்து பிறப்பு இறப்புச் சான்றிதழ்களின் கணினி மயப் படுத்தப்பட்ட பிரதிக்கு அந் தந்த பிரதேச செயலகங்களுக்கு அப் பகுதி மக்கள் விண்ணப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். ஏற்கனவே, யாழ். பிரதேச செயலகத்திலும் நல்லூர் பிரதேச செயலகத்திலும் இவ்வாறான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட மக்கள் யாழ்.செயலக பதிவாளர் திணைக்களத்தில் இச்சான்றிதழ்களிற்கு விண்ணப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (பா)



ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற வருடாந்த இல்ல விளையாட்டு நிகழ்வில், கல்லூரி அதிபர் அருட்தந்தை ஜேம்ஸ் சிங்கராயர், பிரதம விருந்தினரை அழைத்து வருதையும், யாழ்.மாவட்ட அரச அதிபர் வெற்றியீட்டிய மாணவருக்கு வெற்றிக்கேடயம் வழங்குதையும் காணலாம். (27)

## எழுத்தாளர் யோசப்பாலாவின் மணிவிழா ஒன்றுகூடல் நிகழ்வு

எழுத்தாளர் யோசப்பாலாவின் மணிவிழாவினை முன்னிட்டு, இலக்கிய நண்பர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு நாளை மாலை 4.00 மணிக்கு இல.814, யாழ்.ஆஸ்பத்திரி வீதி என்னும் முகவரியில் வாழ்வகத்தின் இயக்குனர் இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் இந்த ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

# இலவச பஸ் சேவை மாணவர்களுக்கு மட்டும்

## கிளிநொச்சியிலும் தொடர்கிறது

கிளிநொச்சியில் பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி கிளிநொச்சி மாவட்ட தனியார் போக்குவரத்துச் சபையினர் இலவச பாடசாலைப் பணியினை ஆரம்பித்துள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவும் முகமாக இலவசப் பாடசாலைச் சேவையை நடத்தும்படி நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் த.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (29)

# மருதங்கேணிப் பாலம் புனரமைப்பு பூர்த்தி

வடமராட்சி கிழக்கு - பச்சிலைப்பள்ளி பிரதேசத்தை இணைக்கும் மருதங்கேணிப் பாலம் போக்குவரத்துக்காக மீண்டும் திறக்கப்படவுள்ளது.

சேதமடைந்திருந்த இந்தப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் கடந்த ஆறு மாதங்களாக நடைபெற்று வருகின்றன. இப்பாலத்தினூடான போக்குவரத்துச் சேவைகள் வரும் வாரம் அளவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதுவரையும் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கான போக்குவரத்துக்கள் இயக்கச்சி ஊடாக கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி வழியாக நடைபெற்று வருகின்றன. (29)

# போக்குவரத்து இடைநிறுத்தம்; பொதுமக்கள் பெரிதும் சிரமம்

இயக்கச்சி - கிளிநொச்சிக்கான பேருந்து சேவை இடைநிறுத்தப்பட்டதால் இந்தப் பகுதி மக்களும், மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இயக்கச்சி கோவில்வயல், பளைப் பிரதேசங்களை உள்ளடக்கி இ.போ.சபையினரால் நடத்தப்பட்ட பஸ் சேவை திடீரென இடை நிறுத்தப்பட்டதால், கோவில் வயல் பிரதேச மக்கள் நீண்ட தூரம் கால்நடையாக நடந்து செல்கின்றனர். சங்கத்தார்வயல், கோவில்வயல் பகுதி மக்களும் இந்தப் பகுதியில் கல்வி கற்கும் மாணவர்களும் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (29)

## இலங்கையில் மனித....

ஆணையாளர் நவநீதம்பிள்ளையைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது. இச்சந்திப்பில் இலங்கையில் மனிதவுரிமைகளை ஊக்குவிப்பதற்காக தயாரிக்கப்பட்டு வருகின்ற தேசிய செயற்பாட்டு வேலைத் திட்டம் குறித்து இலங்கை அரசாங்கத்தின் தூதுக்குழு விரிவாக எடுத்துக் கூறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வில் இலங்கையின் சார்பில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க மற்றும் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் உள்ளிட்ட தூதுக்குழுவினர் கலந்து கொள்ளவுள்ளனர். இலங்கையின் அமைச்சர் மஹிந்த சமரசிங்க இவ்விடயம் குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது, இலங்கையின் தூதுக் குழு ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வுகள் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளன. இவ்வமர்வில் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கையைப் பிரதி நிதித்துவப்படுத்தும் வகையில் நானும், சட்டமா அதிபர் மொஹான் பீரிஸும் மற்றும் சில அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளோம். இம்மாதம் 24ஆம் திகதி நாங்கள் ஜெனிவா பயணமாக உள்ளோம். அதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வில் கலந்து கொள்ளும் எமது தூதுக்குழு ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இச் சந்திப்பின் போது நாங்கள் தயாரித்து வருகின்ற மனிதவுரிமைகளை ஊக்குவிப்பது தொடர்பான தேசிய செயற்பாட்டு வேலைத் திட்டம் குறித்து விரிவாகக் கலந்துரையாட இருக்கின்றோம்.

மனிதவுரிமைகளை ஊக்குவிக்க இவ்வாறு தேசிய செயற்பாட்டு வேலைத் திட்டம் ஒன்றை தயாரித்து நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஜெனிவாவில் உறுதியளிக்கப்பட்டது. இதன் அடிப்படையிலேயே இந்த வேலைத் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம் என ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். அதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வில் இலங்கையின் சார்பில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க விசேட உரையாற்றவுள்ளார். சுமார் ஒரு வருட காலமாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் கீழ் இருந்த மனிதவுரிமைகள் பிரிவு தற்போது மீண்டும் மஹிந்த சமரசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புலிகளுடனான இறுதிக் கட்டப் போரின் போது இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்களும், மேற்கத்தைய நாடுகளும் வலியுறுத்தி வருகிகின்றன.

அத்துடன், இலங்கை அரசாங்கத்தில் மனிதவுரிமை மீறல்களுக்கு எதிராக சர்வதேச ரீதியில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டு வருவதுடன், உள்நாட்டிலும் தொடர்ச்சியான போராட்டங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. அதேவேளை, வன்னிப் போரின் போது இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வில் விவாதிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## சட்டத்தின் பாதுகாப்பு....

சட்டங்களுக்கும், நடைமுறை யில் உள்ள சட்டங்களுக்கும் இடையில் கடுமையான பரஸ்பர முரண்பாடு கள் இருப்பதால், சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளின் தோல்வி கள் மக்களின் வாழ்க்கையில் அனைத்து அங்கங்களிலும் பிரதிபலிப் பதாக ஆசிய மனித உரிமை ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பஷில் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

சட்டம் வெற்றிகரமாக அமுல்படுத்தப்படும் போது, நடைமுறையில் உள்ள சட்டங்கள் மூலம் எழுத்தில் உள்ள சட்டங்களை மீறும் நடவடிக்கைகள் குறையும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

20 வருடமாக தான் வசித்து வரும் ஹொங்கொங்கில் இந்த நிலைமையே காணப்படுகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், இலங்கையில் இந்த நிலைமையில் முற்றும் முழுதான மாற்றங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக சட்டத்திற்கு புறம்பான கொலைகள், சித்திரவதைகள் எழுதப்பட்டுள்ள சட்டங்களில் தடைசெய்யப்பட்டுள்ளன.

இந்த நிலைமையில் இலங்கையில் இடம்பெறும் காணாமல் போதல் சம்பவங்கள் குறித்து சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகள் பொறுப்புக் கூறவேண்டும் என்பதுடன், பொலிஸ் நிலையங்களில் சித்திரவதைகள் நாளாந்தம் நடக்கும் சம்பவங்களாக மாறியுள்ளன எனவும் பஷில் பெர்ணான்டோ குறிப்பிட்டுள்ளார்.

ஹொங்கொங்கில் உள்ள சிறுபான்மை இனத்தவரான தனக்கு சட்டத்தின் பாதுகாப்பு முழுமையாக கிடைக்கின்ற போதிலும், இலங்கையில் சிறுபான்மை இனங்களுக்கும் பெருபான்மை இனத்திற்கும் சட்டத்தின் பாதுகாப்பு கிடைப்பதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புனையப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஆயிரக்கணக்கானவர்கள் குற்றமிழைக்காத நிலையில், சிறைத்தண்டனை அனுபவிப்பது இலங்கையில் சாதாரண விடயமாக மாறியுள்ளது எனவும் ஆசிய மனித உரிமை ஆணைக்குழுவின் பணிப்பாளர் மேலும் கூறியுள்ளார்.

## இலங்கைச் சிறார்களுக்கு....

கூறுகிறது. குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகள் பெரும்பாலும் தோட்டத் தொழி லாளர்கள் வசிக்கும் பகுதிகளிலேயே இடம் பெறுவதாகவும் அந்த அய்வு கூறுகிறது. இது தொடர்பாக இலங்கை அரசின் மகளிர் மற்றும் சிறார்கள் நல அமைச்சகத்தின் துணை அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தமிழோசையிடம் கூறும் போது, யுத்தத்தினால் தான் இவ்வாறு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும், முதற்கட்டமாக இவ்வருடத்தில் இருந்து வட-கிழக்கு மற்றும் மலையகத்தில் உள்ள ஐந்து வயதுக்குக் குறைவாக உள்ள சிறார்களுக்கு பாலர் பள்ளியில் வாரத்திற்கு மூன்று முறை பால் கொடுக்கவுள்ளதாக கூறினார்.

## ஜெனிவாவில் மனித உரிமைகள்....

இலங்கையின் பிரதமர் டி.எம்.ஜயரட்ன, சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்எம்.அஸ்வர் மற்றும் எம்.சுவாமிநாதன் ஆகியோர் 18ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் அமையப் பெற்ற நாடாளுமன்ற சபையின் உறுப்பினர்களாவர். இலங்கையின் 18ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் அமையப்பெற்ற நாடாளுமன்ற சபையின் நேற்றைய முதலாவது அமர்வில் எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை. ஜெனிவாவில் இம்மாத இறுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வு நடைபெறவுள்ள நிலையில், மனிதவுரிமை ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களின் பெயர்கள் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு முன்மொழியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கிற்கான

வன்னி மாவட்டங்களின் அபிவிருத்திக்கு அதிக நிதி ஒதுக்கப்படுவதுடன், யாழ். மாவட்டத்திற்கான அபிவிருத்திக்கு குறைந்தளவிலான நிதியே ஒதுக்கப்படுகின்றது. மேற்படி ஏற்றத் தாழ்வுகள் நீக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களைப் போல் எமது யாழ்.மாவட்டத்துக்கும் அதிக நிதி ஒதுக்கப்படல் வேண்டும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் கோரிக்கை வைத்தபோது அவர் அக் கோரிக்கையினைப் பரிசீலனைக்கு உட்படுத்துவதாகத் தெரிவித்தார்.

சுமார் 1000 மில்லியன் வரையில் யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தி நிதியினைக் கோருவதன் மூலம், வீதி அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி, வீடுகள் அமைப்பு என்பனவற்றை மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளேன். மேலும் கல்விப் பணிக்குரிய நிதி ஒதுக்கீட்டையும் நாம் முன்னெடுப்போம் எனவும் தெரிவித்தார். (27)

## இரசாயன...


பயணித்துக் கொண்டு இருந்தார். அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் வழமையான பஸ் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டபோது இவர் கைது செய்யப்பட்டார்.

அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராக்கப்பட்ட இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு உள்ளார்.



# பொருளாதாரப் பிரச்சினைகளை சமாளிக்க நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பு அவசியம்

## பொதுநலவாய நாடுகளின் கூட்டத்தொடரில் பிரதமர்



(கொழும்பு)

எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் சுற்றுச் சுழல் பிரச்சினைக்கு முகங்கொடுப்பதற்கு, நாடுகளிடையேயான ஒத்துழைப்புகள் மிக முக்கியமானவை என பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற ஒன்றியத்தின் 3 ஆவது வருடாந்த மாநாடு நேற்று கொழும்பில் ஆரம்பமாகியுள்ளது.

இதில் பங்குகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் இலங்கை நாடாளுமன்றத்தின் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, பாகிஸ்தான், மாலைத்தீவு, மற்றும் பங்களா





தேஷ் ஆகிய நாடுகளின் நாடாளுமன்ற சபாநாயகர்களுடன், இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் பங்குகொண்டார்.

இந்த முறை இடம்பெற்ற சபாநாயகர்களது மாநாட்டில் சுற்றுச் சுழல் பாதுகாப்பு, கால நிலை மாற்றங்கள், வறுமை ஒழிப்பு மற்றும் தாய் சேய் நலன் கள் என்ற விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

இந்த நிகழ்வில் பங்கு கொண்ட இந்திய கீழ் சபையின் சபாநாயகர் ஸ்ரீமத்மீரா குமார், இலங்கையின் அழகைத் தாம் பெரிதும் விரும்புவதாகக் குறிப்பிட்டார்.



புனரமைக்கப்பட்ட கெத்தாராம ஆர். பிரேமதாஸ சர்வதேச விளையாட்டரங்கு நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டு பாவனைக்காக கையளிக்கப்பட்து. இது தொடர்பில் நேற்று நடைபெற்ற வைபவத்தில் அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, விமல் வீரவன்ச உட்பட விளையாட்டு அமைச்சின் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# லண்டன் ஆர்ப்பாட்டத்தின் எதிரொலி? திருமலை திரும்பிய இளைஞர் கடத்தல்

(திருகோணமலை)

லண்டனில் இருந்து திருகோணமலைக்கு வந்த தமிழ் இளைஞர் ஒருவர் கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் இனம் தெரியாத சிலரால் கடத்திச் செல்லப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் மாலை விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர் கடத்திச் செல்லப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து பாரிய காயங்களுக்கு உட்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அவர் தற்போது திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


இதற்கிடையில் லண்டனில் இருந்து வந்த அவரை புலனாய்வுத்துறையினரே கடத்திச் சென்றதாகத் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தாம் அவர்களுடன் இருந்து காலப்பகுதியில் தம்மிடம் பல்வேறு கேள்விகளை எழுப்பி விசாரணை நடத்தியதாக தாக்குதலுக்கு உட்பட்டவர் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் ஜனாதிபதி லண்டன் சென்றிருந்த போது இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்துடன் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம் என சந்தேகிக்கப் படுகிறது

## வடக்கு-கிழக்குப் பகுதிகளில்

# 283 ச.கி.மீ. பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றப்பட வேண்டியுள்ளது

## இராணுவப் பேச்சாளர் தகவல்





(கொழும்பு)

நாட்டின் வடக்கு மற்று கிழக்கு மாகாணங்களில் உள்ள கடந்த கால யுத்த பிரதேசங்களில் இருந்து இது வரை 308,785 கண்ணிவெடிகள் நீக்கப்பட்டு உள்ளன என்று இராணுவம் அறிவித்து உள்ளது.

1885 சதுர கிலோமீற்றர் பிரதேசத்தில் இருந்து இக்கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு இருக்கின்றன என்றும், 283 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தில் இருந்துதான் இன்னமும் கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டி உள்ளன என்றும் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உதய மெதவல தெரிவித்தார்.

கண்ணிவெடிகள் முற்றாக அகற்றப்பட்டு இருக்கும் இடங்களில் மக்களை மீள்குடியேற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் இவர் குறிப்பிட்டார்.

## அவுஸ்திரேலியாவுக்கு புகலிடம் புகும்

# அகதிகள் கப்பல்கள் மலேசியாக் கடற்பரப்புக்கு வரத் தடை

(சிட்னி)

புகலிடம் கோரும் நோக்குடன் அவுஸ்திரேலியா நோக்கிச் செல்லும் கப்பல்கள் மற்றும் படகுகள் என்பன இனி வரும் காலங்களில் மலேசியக் கடற்பரப்புக்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்பட மாட்டாதென அறியக் கிடைத்துள்ளது.

அதன் ஒரு கட்டமாக சட்ட விரோதக் குடியேற்றவாசிகளை ஏற்றிவரும் கப்பல்கள் மற்றும் படகுகளை இடைமறிக்க உதவும் அதிவேகப் படகுத் தொகுதியொன்றை மலேசியக் கடற்படைக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் வழங்கியுள்ளது.

அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ள அந்தப் படகுத் தொகுதியின் பெறுமதி ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்பதாக உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதற்கு மேலும் இன்னும் பல நிதி அன்பளிப்புகளும் வழங்கப்படவுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

இலங்கை, ஆப்கான் போன்ற பல்வேறு நாடுகளிலிருந்து தஞ்சம் கோரும் நோக்குடன் அவுஸதிரேலியா நோக்கி கடல்வழியாகப் பயணிப்பவர்கள் மலேசியக் கடற்பரப்பைக் கடந்தே அங்கு செல்ல வேண்டியிருக்கும் நிலையில், இனி வரும் காலங்களில் அதற்கும் முட்டுக்கட்டை போடப்படவுள்ளது.

## உள்ளூராட்சித் தேர்தல் களம்

# வன்முறையில் ஈடுபட்ட 19 பேர் இதுவரை கைது

(கொழும்பு)

தேர்தல்கள் தொடர்பான வன்முறைகளுடன் தொடர்புடைய 19 பேர் இதுவரையிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, தேர்தல்கள் தொடர்பான சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்தார்.

இதனிடையே உள்ளூராட்சிச் சபை தேர்தல்கள் தொடர்பான வன்முறை சம்பவங்கள் 33 பதிவு செய்யப்பட்டுள்ளதாக பெவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

## மீண்டும் வெள்ளைவான் பீதி

# கிளிநொச்சி வர்த்தகர் ஒருவர் இனம்தெரியாதோர் கடத்தல்

(கிளிநொச்சி

கிளிநொச்சியில் வர்த்தகர் ஒரு இனந்தெரியாதோரால் வெள்ளை வாகனத்தில் கடத்தப்பட்டுள்ளார்

கிளிநொச்சி அம்பாள் குளம் பகுதியில் நேற்றுக் காலை தனியார் வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவர் இனந்தெரியாதோரால் வெள்ளை வாகனத்தில் கடத்தப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

நேற்றுக் காலை 11 மணியளவில் குறித்த வர்த்தகர் தனது வர்த்தக நிலையத்தை திறந்து கொண்டிருந்துபோது அங்கு வெள்ளை நிற வாகனத்தில் வந்த சிலர் இவரை வாகனத்திற்கருகில் அழைத்ததை அங்கு நின்ற சிலர் பார்த்துள்ளனர்.


அதன்பின்னர் நடந்த சம்பவம் தொடர்பில் எவருக்கும் எதுவும் தெரியாது என கூறியுள்ளனர். குறித்த வர்த்தகர் இதே பகுதியில் மெடேன் ஸ்ரோர்ஸ் என்ற வர்த்தக நிலையமென்றை நடத்தும் எஸ்.தியாகராசா (வயது 53) என்பரேயாவார்.

இந்தச் சம்பவம் எதற்காக நடத்தப்பட்டுள்ளது. யாரால் நடத்தப்பட்டது என்பது தெரியாத நிலையில் அப்பகுதி மக்கள் பெரிதும் குழம்பியுள்ளனர்.

# முகாமைத்துவம் பற்றிய தெளிவு அரசிற்கு இல்லை

## இது கரு ஜயசூரியவின் கண்டுபிடிப்பு

(கொழும்பு)



உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் தொடர்பான பிரசாரங்கள் தற்போது மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் கேகாலையில் நேற்று இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் பங்கு கொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய, அரசாங்கத்திற்கு முகாமைத்துவம் பற்றிய தெளிவு நிலை இல்லை எனக் குறிப்பிட்டார். எவ்வாறாயினும் உயர்கல்வி அமைச்சர் எஸ் பி. திஸாநாயக்க இந்த குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை.

நாட்டில் தற்போது பொருளாதாரம், உள்ளிட்ட துறைகளில் அரசாங்கம் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இதனிடையே கொழும்பில் நேற்று இடம்பெற்ற கட்சியின் கூட்டத்தில் உரையாற்றிய ஜே.வி.பி.யின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா, ஏமாற்று அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

## மூவர் கைது

(வவுனியா)

வவுனியா புகையிரதப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையத்தை உடைத்து திருட்டில் ஈடுபட்ட சந்தேக நபர் மூவரை வவுனியாப் பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

இன்று இவர்கள் வவுனியா மாவட்ட பதில் நீதிவான் வீட்டில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளார். (39)

இந்தியாவிலிருந்து.....

இவற்றை மறைத்து வைத்து இருக்கின்றார். இவர் மீது சந்தேகம் அடைந்த அதிகாரிகள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டபோதே இவற்றை கடந்த வியாழக்கிழமை கண்டு பிடித்தனர். இச்செய்மதி உபகரணங்களின் ஒட்டுமொத்த பெறுமதி ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் எனச் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 பெப்ரவரி 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.